# 1. நிதிக்கூற்றுக்கள்

## 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

தென் மாகாண சபையின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுக்கு உரிய தகவல்களையும் உள்ளடக்கி நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்களுடன் கூடிய 2024 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(3) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும் 1987 இன் 42 ஆம் இலக்க மாகாண சபைகள் சட்டத்தின் 23(1) ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. மாகாண சபைகள் சட்டத்தின் 23(2) ஆம் பிரிவினதும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1) ஆம் உப பிரிவினதும் ஏற்பாடுகளின் பிரகாரம் பொழிப்பறிக்கை 2025 யூன் 25 ஆந் திகதி வழங்கப்பட்டதுடன் தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(2) ஆம் உப பிரிவின் பிரகாரம் விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2025 யூன் 30 ஆந் திகதி வழங்கப்பட்டது. அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரை மற்றும் தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கும், அறிக்கையின் பிரதி 1987 இன் 42 ஆம் இலக்க மாகாண சபைகள் சட்டத்தின் 23(2) ஆம் பிரிவின் பிரகாரம் மாகாண சபையில் முன்வைப்பதற்காக ஆளுனருக்கும் சமர்ப்பிக்கப்படுகின்றது.

இந்த அறிக்கையின் முனைப்பழியுள்ளதாக்கப்பட்ட பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களின் விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான தென் மாகாண சபையின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

### 1.2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

**(அ) தென் மாகாண சபை நிதியம்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (i) | மீளாய்வாண்டில் தென் மாகாண சபை 02 நிறுவனங்களுக்கு ரூபா 123,000,000 தொகை ஒன்று செலுத்தப்பட்டதாக பிழையாகக் குறிப்பிடப்பட்டமை மற்றும் ஆரம்ப சுகாதார அவசர நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் கட்டுநிதி தயாரித்தல் ரூபா 8,696,308 மற்றும் 02 நிகழ்ச்சித் திட்டங்களுக்காக கிடைத்த ரூபா 10,153,959 தொகை திறைசேரிக்கு மீள அனுப்புதல் மீளாய்வாண்டில் ஏனைய செலுத்திய கொடுப்பனவுகளின் கீழ் காண்பிக்கப்பட்டமையால் ஆண்டின் செலவினம் ரூபா 141,850,267 இனால் அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது. | எதிர்காலத்தில் இவ்வாறான வழுக்கள் ஏற்படாமல் இருப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | செலவினங்கள் சரியாக இனங்கண்டு கணக்கீடு செய்யப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ii) | தென் மாகாண சபையின் 10 நிறுவனங்களுக்கு உரிய ரூபா 386,664,286 ஆன ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களின் பெறுமதி கணக்கீடு செய்யப்படாது இருந்ததுடன் 07 நிறுவனங்களுக்கு உரிய ரூபா 355,554,768 ஆன ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களின் பெறுமதி ரூபா 262,467,344 ஆக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களின் பெறுமதி ரூபா 479,751,710 இனால் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது. | 2025 ஆம் ஆண்டின் போது சரியாகக் கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களின் சரியான பெறுமதி கணக்கீடு செய்யப்படல் வேண்டும். |

### 1.2.2 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|
| தென் மாகாண நிதியக் கணக்கின் நிதி நிலைமைக் கூற்றின் நடைமுறைப் பொறுப்புக்களின் கீழ் காண்பிக்கப்பட்ட உள்ளூராட்சி நிறுவனங்களின் செலுத்த வேண்டிய முத்திரைக் கட்டணம் மற்றும் நீதிமன்றத் தண்டப்பணம் முறையே ரூபா 1,121,074,823 மற்றும் ரூபா 65,320,913 ஆக இருந்ததுடன் உரிய உள்ளூராட்சி நிறுவனங்களினால் மீளாய்வாண்டில் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் அப் பெறுமதி முறையே ரூபா 2,373,348,436 மற்றும் ரூபா 148,204,932 ஆகும். அதன் பிரகாரம் நீதிமன்றத் தண்டப் பணம் மற்றும் முத்திரைக் கட்டணங்களில் கூட்டு மொத்தமாக ரூபா 1,335,157,632 வேறுபாடு அவதானிக்கப்பட்டது. | உள்ளூராட்சி நிறுவனங்களினால் பட்டோலை விநியோகிக்கப்படாத மாதங்களுக்காக பாதீட்டில் முத்திரைக் கட்டணம் மற்றும் நீதிமன்றத் தண்டப் பணம் ஒதுக்கப்பட்டுள்ள அளவை அடிப்படையாகக் கொண்டு மதிப்பீட்டு பெறுமதி எடுக்கப்படுகின்றமையால் இந்த வேறுபாடு ஏற்பட்டிருந்தது. | மீதிகளை ஒப்பீடு செய்து நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

மாகாண சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் வடமத்திய மாகாண சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது கூட்டுச்சதி, கள்ளத்தனம், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி மாகாண சபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வின் போது கண்டறியப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள், பிரதான உளள்கக் கட்டுப்பாட்டு நலிவுகள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக முகாமைத்துவத்திற்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

**1.5 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்**

**1.5.1 தலைப்பு 300 – தென் மாகாண ஆளுநர் செயலகம்**

**(அ) சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|
| 2023 நவம்பர் 19 ஆம் திகதி முதல் 04 நாட்களின் போது 24 ஆவது உள்ளக தீவு சுற்றுலா கொள்கை மாநாடை நடாத்துவதாகக் காண்பித்து தென் மாகாண சபைக்கு மாத்திரம் அனுப்பப்பட்டிருந்த இலத்திரனியல் தபால் அறிவித்தலை அடிப்படையாகக் கொண்டு ஆளுநரை உள்ளடக்கிய ஆளுநர் செயலகத்தை பிரதிநிதித்துவப்படுத்திய நான்கு உத்தியோகத்தர்கள், ஆளுநரின் பிரத்தியேக செயலாளர் மற்றும் தனியார் நிறுவன முகாமைத்துவ பணிப்பாளர் பங்கு பற்றியதற்காக ஆளுநர் செயலகத்தால் ரூபா 3,001,106 தொகை செலவிடப்பட்டிருந்த போதிலும் அந்த மாநாட்டுக்கு பங்கு பற்றியதால் கிடைத்த அறிவு மற்றும் அநுபவம் கொள்கை ரீதியான விடயங்கள் தொடர்பாக எந்த ஒரு அறிக்கையும் இது வரை வழங்கப்பட்டிருக்கவில்லை. மேலும் தென் மாகாண நிதி விதிக் கோவையின் விதி 2.1(2) இன் பிரகாரம் மாகாண ஒன்றில் மாகாண சபை நிதியத்தில் இருந்து எந்த ஒரு தொகையும் 1987 இன் 42 ஆம் இலக்க மாகாண சபைகள் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு முரணாக செலவினம் செய்ய முடியாது இருந்த போதிலும் தனியார் நிறுவனம் ஒன்றின் முகாமைத்துவப் பணிப்பாளர் மாகாண | ஆளுநரால் மாநாட்டிற்காக தொடர்புபடுகின்ற உத்தியோகத்தர்களின் பெயர் குறிப்பிடப்படுவதாக குறிப்பிடப்பட்டதுடன் ITOP நிகழ்ச்சித் திட்டத்திற்கு இணையாக வியாபார மாநாடும் நடாத்தப்பட்டதுடன் அதற்காக மாகாணத்தின் தொழில் முயற்சியாளர்கள் பங்கு பற்றும் தேவை இருந்தமையால் தென் மாகாணத்தின் சுற்றுலா வியாபாரத்திற்காக கணிசமான பங்களிப்பை வழங்குகின்ற மற்றும் வியாபார நடவடிக்கைகள் ஈடுபடுகின்ற வியாபாரி ஒருவர் பங்கு பற்றியிருந்ததுடன் உரிய வெளிநாட்டு பிரயாண அமைப்பு நடவடிக்கைகளை இலகு படுத்துவதற்கு அந்த நிதி அரசாங்கத்தால் செலுத்தப்பட்ட போதும் மீளளிப்புச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் இதற்காக மேலதிக கிரயம் ஒன்றை செலவிட வேண்டி இல்லாது இருந்தமையால் 2023 மார்ச் 26 ஆம் திகதிய நிதி, பொருளாதார உறுதிப்பாடு | தென் மாகாண நிதி விதிக் கோவை மற்றும் ஆலோசனைக் கடிதத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | |
|---|---|
| சபை நிதியத்தில் இருந்து செலவினங்களைச் செய்து இந்த சுற்றுலாவிற்கு பங்குபற்றியிருந்ததுடன் மாநாட்டுக்கு பங்கு பற்றுகின்ற தரப்பினர்களுக்காக உணவு பாணங்கள் வழங்கப்பட்டதாகக் காண்பித்து 2023 மார்ச் 20 ஆந் திகதிய நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கை அமைச்சு செயலாளரின் இலக்கம் MF/06/23/50/2023 என்ற ஆலோசனைக் கடிதத்தின் 02(III) பிரிவுக்கு முரணாக உபசரிப்பு செலவினப் படியாக அமெரிக்க டொலர் 750 தொகை அதாவது ரூபா 245,393 ஆளுநருக்கு செலுத்தப்பட்டிருந்தது. | மற்றும் தேசிய கொள்கை அமைச்சு செயலாளரின் இலக்கம் MF/06/23/50/2023 என்ற ஆலோசனைக் கடிதத்தின் மூலம் வெளிநாட்டு பிரயாணப் படி வரையறுக்கப்பட்டிருந்த போதும் அந் சுற்றறிக்கையின் 2 க்கு III பந்தியின் பிரகாரம் தீவுகளின் தலைமைத்துவத்தில் ஈடுபடுகின்ற அமைச்சு அல்லது செயலாளருக்கு ஐக்கிய அமெரிக்க டொலர் 750 ($) செலுத்த வேண்டி இருந்தமையால் அந்த பணம் செலுத்தப்பட்டதாகவும் ஆளுநரினதும் ஆளுநரின் இணைப்பு செயலாளரினதும் வெளிநாட்டு பிரயாணச் செலவிற்காக மொத்த கிரயமும் பங்களிப்பு நிறுவனத்தின் மூலம் செலவிடப்பட்டிருந்தது. |

**(ஆ) தீர்க்கப்படாது இருந்த கணக்காய்வுப் பந்திகள்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|
| **(i) ஆளுநர் செயலகத்தின் உத்தியோகபூர்வ வாகனம் தொடர்பான பரீட்சிப்பு** | | |
| (ஏ) சனாதிபதி செயலாளரின் 2018 ஒக்தோபர் 12 ஆந் திகதிய இலக்கம் PC/CSA/11-18 என்ற சுற்றறிக்கையின் 4.2 ஆம் பிரிவு மற்றும் 2021 திசெம்பர் 29 ஆந் திகதிய இலக்கம் 13/2008 (VI) என்ற திருத்தப்பட்ட அரச நிர்வாக சுற்றறிக்கையின் பிரகாரம் ஆளுநர் பொதுமக்கள் இணைப்பு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்ட வாகனத்திற்காக 2023 சனவரி முதல் ஆகஸ்ட் வரை மாதம் ஒன்றுக்கு எரிபொருள் லீற்றர் 213 வீதம் 1,704 எரிபொருள் லீற்றருக்காக ரூபா 601,512 எரிபொருள் படியாக செலுத்தப்பட்டிருக்கும் போது அந்த காலப் பகுதியில் பொது மக்கள் இணைப்பு உத்தியோகத்தர் களக் கடமை நடவடிக்கைகளுக்காக பிரயாணம் செய்த திகதி 119 நாட்களில் 118 இற்காக தனது பதவிக்கு ஒதுக்கப்பட்ட வாகனம் பயன்படுத்தப்படாது இருந்ததுடன் ஓட்டத்திற்காக ஆளுநரின் உத்தியோகபூர்வ வாகனம் அல்லது ஆளுநரின் பாதுகாப்பு | சனாபதி செயலாளரின் அரச செலவின முகாமைத்துவத்தின் கீழ் விநியோகிக்கப்பட்ட சனாதிபதி சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் பொது மக்கள் இணைப்பு உத்தியோகத்தர் பயன்படுத்துகின்ற உத்தியோகபூர்வ வாகனங்களுக்காக மாதாந்த எரிபொருள் படி செலுத்தப்பட்டிருந்தது. அவ்வாறே ஆளுநருக்கும் அந்த சுற்றறிக்கையின் ஏற்பாடுகளின் பிரகாரம் ஆளுநரின் பாதுகாப்பு வாகனத்திற்காக சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்ட எரிபொருள் லீற்றர் அளவிற்காக மாதாந்த எரிபொருள்படி செலுத்தப்பட்டுள்ளதுடன் | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | வாகனம் ஈடுபடுத்தப்பட்டிருந்தது. எனினும் மாகாண சபை நிதியத்தில் இருந்து ஆளுநருக்கும் ஆளுநரின் பாதுகாப்பு வாகனத்திற்காக அந்த கால எல்லைக்காவும் மாதத்திற்கு 495 லீற்றர் எரிபொருள் வீதம் 3,960 லீற்றருக்காக ரூபா 1,397,880 செலுத்தப்பட்டிருந்தது. | ஆளுநரின் ஆலோசனையின் அடிப்படையில் மற்றும் கடமை நடவடிக்கைகளை இலகு படுத்துவதற்காக பொது மக்கள் இணைப்பு உத்தியோகத்தர் ஆளுநரின் உத்தியோக பூர்வ வாகனத்தின் அல்லது பாதுகாப்பு வாகனத்தில் பிரயாணம் சில சந்தர்ப்பங்களில் இடம் பெற்றது. | |
| (பீ) | 2008 யூன் 26 ஆம் திகதிய இலக்கம் 13/2008 என்ற அரச நிர்வாக சுற்றறிக்கையின் இணைப்பு 01 இன் பிரகாரம் ஆளுநரின் குழாம் வாகனத்தில் காணப்பட்ட ஜீப் வண்டிக்காக 2022 சனவரி மாதம் மாத்திரம் ஓட்டக் குறிப்புக்கள் சமர்ப்பிக்கப்பட்டதுடன் கிலோ மீற்றர் 4,164 தூரம் ஓடியதற்காக ஓட்டக் குறிப்புக்கள் சமர்ப்பிக்கப்படவில்லை. | அந்த வாகனத்திற்காக நியமிக்கப்பட்ட சாரதி ஒருவர் இல்லாது இருந்ததுடன் ஆளுநரின் உத்தியோகபூர்வ வாகனத்தை உள்ளடக்கிய 03 குழாம் வாகனங்கள் மற்றும் பொது மக்கள் இணைப்பு உத்தியோகத்தருக்கு ஒதுக்கப்பட்ட வாகனத்தை உள்ளடக்கிய 04 வாகனங்களுக்காக இரண்டு சாரதிகள் மாத்திரம் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர். அநேகமான சந்தர்ப்பங்களின் போது கடமை நடவடிக்கைகளின் போது ஆளுநர் தரப்பினரின் வாகனத்தை ஓடுவதற்காக தென் மாகாண பிரதம செயலகத்தில் இருந்து சாரதிகள் தற்காலிமாக நியமிக்கப்பட்டதுடன் முன்னாள் இருந்த சாரதிகள் இருவருக்காக 04 வாகனங்களில் சந்தர்ப்பங்களுக்கு ஏற்ப ஓட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருந்தது. | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ii) | 2019 மே 02 ஆந் திகதிய மற்றும் 2020 சனவரி 15 ஆம் திகதிய தென் மாகாண அமைச்சரவை தீர்மானத்தின் பிரகாரம் 2019 யூன் 25 ஆந் திகதி முதல் மாதம் ஒன்றிற்கு ரூபா 75,000 படி மற்றும் அமைச்சின் சிரேஸ்ட உதவிச் செயலாளருக்கு உரித்தான வரப்பிரசாதங்களின் கீழ் 2019 யூன் 25 ஆந் திகதி முதல் ஆளுநரின் ஆலோசகராக நியமிக்கப்பட்டிருந்தார். அந்த ஆலோசனையாளருக்கு 2019 யூன் 25 ஆந் திகதி முதல் 2023 ஆகஸ்ட் 31 ஆந் திகதி வரை எரிபொருள் படியாக ரூபா 3,203,409 | ஆளுநருக்கு கையளிக்கப்பட்டுள்ள அதிகாரங்களின் பிரகாரம் உரிய உத்தியோகத்தர் தென்மாகாண அரசாங்க சேவை ஆணைக்குழுவின் அங்கத்தவர் பதவிக்கு நியமிக்கப்பட்டதுடன் உரிய பதவிக்கு உரித்தான படிகள் மற்றும் ஏனைய கொடுப்பனவுகள் அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் | அமைச்சரவை தீர்மானத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

தொகை செலுத்தப்பட்டிருந்தது. மேலும் ஆளநரின் ஆலோசகராக சேவையாற்றியிருக்கும் போது 2020 மார்ச் 18 ஆந் திகதி தென் மாகாண அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் அங்கத்தவராகவும் நியமிக்கப்பட்டதுடன் அத்திகதியில் இருந்து 2023 ஆகஸ்ட் 31 ஆந் திகதி வரை ரூபா 1,166,838 படி செலுத்தப்பட்டிருந்ததுடன் அந்த நிலமை அவ்வாறு இருக்கும் போது அந்த ஆலோசனையாளர் ஒரு வருட காலத்திற்காக ஒப்பந்த அடிப்படையில் காலி மரபுரிமை மன்றத்தின் பணிப்பாளர் பதவிக்காக நியமிக்கப்பட்டிருந்தார். அவ்வாறு ஆளுநர் செயலாளரின் உத்தியோகபூர்வ வாகனம் மற்றும் எரிபொருள் படி பெற்று இருக்கும் போது மேலும் அந்த ஆலோசனையாளர் காலி மரபுரிமை மன்றத்தின் மோட்டார் காரை பயன்படுத்தி இருந்ததுடன் அந்த வாகனத்திற்காகவும் 2021 யூலை மாதம் முதல் ஒரு வருட காலத்திற்காக எரிபொருள் படி பெறப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் 2019 யூன் மாதம் முதல் 2023 ஆகஸ்ட் 03 வரையான காலப் பகுதியில் 03 நிறுவனங்களில் சேவையாற்றியமை மற்றும் அதில் ஆளுநர் செயலாளர் மற்றும் காலி மரபுரிமை மன்றத்தின் எரிபொருள் பெற்றிருந்தமை பிழையான நிலைமை ஒன்று காணப்படுகின்றமை அவதானிக்கப்பட்டது.

மூலம் மேற்கொள்ளப்பட்டதுடன் மாகாண சபைகளின் மாகாண பிரதம அமைச்சர் மற்றும் அமைச்சரவையினால் மேற்கொள்ளப்பட்ட சகல கடமைகளும் மாகாண ஆளுநருக்கு கையளிக்கப்பட்டமையால் அந்த கடமைகளுக்காக ஆளுநருக்கு உதவி வழங்குவதற்காக ஆலோசனையாளர் நியமித்தல் நேரடியாக ஆளுநர் ஆலோசனையின் பிரகாரம் மேற்கொள்ளப்பட்டதுடன் ஆளுநரின் அங்கீகாரத்தின் பிரகாரம் ஆளுநர் ஆலோசனையாளர் பதவியின் கடமை நடவடிக்கைகளுக்காக ஒரு வாகனம் வழங்கப்பட்டதுடன் அரசாங்க சேவைகள் ஆணைக்குழு மற்றும் காலி மரபுரிமை மன்றத்திற்கான படிகள் மற்றும் ஏனைய கொடுப்பனவுகள் அந்த அலுவலகத்தினால் மேற்கொள்ளப்படவில்லை.

## 1.5.2 தலைப்பு 301 – தென் மாகாண சபை செயலகம்

### (அ) சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| 2018 ஒக்தோபர் 12 ஆந் திகதிய இலக்கம் PS/CSA/11-18 என்ற சனாதிபதி செயலாளரின் சுற்றறிக்கை | தலைவரின் பிரத்தியேக பதவியணியினரின் முகாமைத்துவ உதவியாளர் பதவிக்காக 2022 திசெம்பர் 01 ஆந் திகதி நியமனம் வழங்கப்பட்டிருந்த நபருக்கு அத் திகதியில் வயது 58 வருடங்களும் 08 மாதங்களும் பூர்த்தியாகி இருந்ததுடன் அதன் பிரகாரம் முகாமைத்துவ உதவியாளர் | 2023 ஆம் ஆண்டின் மார்ச் வரையில் 60 வருடங்களாக இருந்ததை ஏற்றுக் கொள்வதுடன் அவரின் பதவி அரசாங்க சேவையின் நிரந்தர பதவி இல்லாது இருந்தமையால் மற்றும் மாகாண சபையுடன் தொடர்பான தலைவரின் கடமைகளை நிறைவேற்றுதல் | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | சேவை தொகுதிக்கான ஆட்சேர்ப்பு நடைமுறையில் ஆகக் கூடிய வயது எல்லையான 30 வருட எல்லையை விஞ்சியிருக்கும் போது உரிய நியமனம் வழங்கப்பட்டிருந்தது. மீளாய்வாண்டின் இறுதி வரையில் 60 வருடங்களை பூர்த்தி செய்திருந்த போதிலும் 2022 திசெம்பர் மாதம் முதல் மீளாய்வாண்டின் திசெம்பர் மாதம் வரை கூட்டுமொத்தமாக ரூபா 1,031,125 சம்பளம் மற்றும் படிகளாக செலுத்தப்பட்டிருந்தது. | தொடர்பான பதவியாக இருந்தமையால் ஆட்சேர்ப்பு சுற்றறிக்கை தொடர்பாக அவ்வாறு கவனம் செலுத்தப்படாமல் ஆட்சேர்ப்பு மேற்கொள்ளப்பட்டதுடன் தற்போது அந்த உத்தியோகத்தருக்கு சம்பளம் செலுத்துதல் நிறுத்தப்பட்டுள்ளது. | |

**(ஆ) முகாமைத்துவ செயற்திறனின்மைகள்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (i) | 1987 இன் 42 ஆம் இலக்க மாகாண சபைகள் சட்டத்தின் II பகுதியின் 7.2 உப பிரிவில் சபை கலைக்கப்பட்டதன் பின்னர் நடாத்தப்பட்ட சபையின் முதலாவது கூட்டம் வரையிலும் தலைவரின் பதவிக் காலத்தில் காணப்படுவதாகக் குறிப்பிடப்பட்டிருந்தது. சனாதிபதி செயலாளரின் 2018 ஒக்தோபர் 12 ஆம் திகதிய இலக்கம் PS/CSA/11-18 என்ற சுற்றறிக்கையின் ஏற்பாடுகளின் பிரகாரம் மாகாண சபையின் தலைவரின் பிரத்தியேக பதவியணியினர் மற்றும் ஏனைய வசதிகள் தொடர்பான சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்ட எல்லையின் கீழ் நடவடிக்கை எடுக்க வேண்டிய போதிலும் தென் மாகாண சபையின தலைவரின் பிரத்தியேக பதவியணியினராக 10 பேருக்கு நியமனம் வழங்கப்பட்டதுடன் 2022 ஒக்தோபர் 28 ஆம் திகதிய சனாதிபதி செயலாளரின் இலக்கம் PS/CSA/00/1/4/2(2) என்ற சுற்றறிக்கை மூலம் பிரத்தியேக பதவியணியினர் 06 பேர்கள் குறைக்கப்பட்டிருந்தது. தென் மாகாண சபை 2019 ஏப்ரல் 10 ஆம் திகதி முதல் கலைக்கப்பட்டதுடன் அத் திகதியில் இருந்து 2024 திசெம்பர் 31 ஆம் திகதி வரை தலைவருக்கு சம்பளம் மற்றும் படிகளாக ரூபா 15,538,305 தொகையும், அவரின் பிரத்தியேக பதவியணியினர் நிறைவேற்றிய கடமைகள் மற்றும் வருகைகள் தொடர்பாக எந்த ஒரு தகவலும் காணப்படாது இருக்கும் போது | தென் மாகாண சபை கலைக்கப்பட்ட பின்னர் கணக்கு குழுவின் பின் தொடர் நடவடிக்கைகள் 2022 ஆம் ஆண்டின் போதும் முறைப்பாடுகள் செயற்குழுவின் மேற்கொள்ளும் நடவடிக்கைகள் 2023 ஆம் ஆண்டின் போதும் ஆரம்பிக்கப்பட்டதுடன் கணக்கு குழு சபையின் பின்தொடர் நடவடிக்கைகள் தலைவரின் தலைமையிலும், முறைப்பாட்டுக் குழுவின் பின்தொடர் நடவடிக்கைகள் ஆளுநரின் தலைமையிலும் நடாத்தப்பட்டதுடன் தலைவரின் பதவியணியினரின் விருப்பத்தின் அடிப்படையில் பிரதேசத்தின் அவரின் பிரத்தியேக தனிப்பட்ட வீட்டில் நடாத்தப்பட்டமையால் சபை செயலகத்தில் கையொப்பம் இடல் மேற்கொள்ளப்பட | மாகாண சபைகள் சட்டம் மற்றும் சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | சம்பளம் மற்றும் படிகளாக ரூபா 33,407,601 தொகையும் சபை செயலகத்தால் செலுத்தப்பட்டிருந்தது. | வில்லை. | |
| (ii) | தென் மாகாண பிரதிப் பிரதம செயலாளரின் (பொறியியல் சேவை) 2019 செப்தெம்பர் 17 ஆந் திகதிய சபை செயலாளருக்கு முகவரி இடப்பட்ட இலக்கம் 1/9/2/17/2019 என்ற கடிதத்தின் பிரகாரம் சபை செயலகத்தில் நிர்மாணிக்கப்பட்ட நீர் கோபுரக் கட்டமைப்பில் பழுதடைந்த தூண் மற்றும் பக்கச் சுவரின் ஒரு பகுதி முழுமையாக அகற்றப்பட்டு குறித்துரைத்த நியமத்தின் பிரகாரம் மீண்டும் தயாரிப்பதற்காக மொறட்டுவ பல்கலைக் கழகம் அல்லது ஏற்றுக்கொள்ளப்பட்ட நிறுவனத்தில் இருந்து கட்டமைப்பைப் பழுது பார்த்து (structural repairs) தொடர்பாக பரிந்துரை அறிக்கை ஒன்றைப் பெற்று மீளமைப்பதற்கு பொருத்தமுடையது என காண்பிக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவனத்தில் இருந்து வழங்கப்பட்டிருந்த பரிந்துரையை அமுல்படுத்தப்படாமல் பிரதேசத்தின் கிராம அபிவிருத்தி சங்கத்தின் மூலம் ரூபா 512,100 செலவில் உரிய நிர்மாணங்கள் மேற்கொள்ளப்பட்டதுடன் அந்த பழுது பார்த்தல்கள் கொங்கிரீட் மற்றும் இரும்பு கம்பிகள் தொடர்பான கட்டமைப்பு வெற்றியளிக்காமையினால் (Structural Failure) அவ்வாறான விசேட பணிகளை நிறைவேற்றுவதற்கு கிராம அபிவிருத்தி சங்கத்திற்கு உள்ள இயலுமை கணக்காய்விற்கு உறுதிப்படுத்த முடியாது இருந்ததுடன் 2014 ஒக்தோபர் 14 ஆந் திகதி சமர்ப்பிக்கப்பட்ட மொறட்டுவ பல்கலைக் கழகத்தின் பொறியியல் பிரிவின் SPC/R/1/1/(ii)/CB/3/2/4/002 ஆம் இலக்க தொடர்புடைய கட்டிடம் தொடர்பான அறிக்கையின் 34 ஆவது பக்கத்தின் E8 இன் கீழ் A மற்றும் B கட்டிடங்கள் இரண்டிலும் A கட்டிடத்தின் இயலளவை அதிகரித்தமையும் A மற்றும் B கட்டிடத்தின் 02 இற்கு இடையே குழி ஒன்று ஏற்பட்டுள்ளமையும் அவதானிக்கப்பட்டதன் அடிப்படையில் கட்டிடத்தை வலுப்படுத்துதல் தொடர்பான பிரச்சனையுடனான நிலைமை ஏற்பட்டிருந்தமை வெளிப்படுத்தப்பட்டிருந்தது. | தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவனத்தால் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கையில் குறிப்பிடப்பட்ட பரிசோதனைகளுக்காக கணிசமான தொகை மற்றும் காலம் எடுக்கின்றமையினால் அதன் 3.4 ஆம் பந்தியின் பரிந்துரை மாவட்ட பொறியியலாளர் (கட்டிடம்) இற்கு சமர்ப்பிக்கப்பட்டு அதன் பிரகாரம் மதிப்பீட்டைக் கோரி உரிய பழுது பார்த்தல் அந்த நிறுவனத்தின் முழுமையான மேற்பார்வை மற்றும் அவர்களின் ஆலோசனையின் பிரகாரம் மேற்கொள்ளப்பட்டதுடன் நீண்ட கால உறுதிப்பாட்டை உறுதிப்படுத்திக் கொள்வதற்கு தேவையான அறிக்கை பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவனத்தின் பரிந்துரையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**(இ) தீர்க்கப்படாதிருந்த கணக்காய்வு பந்திகள்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (i) | தென் மாகாண சபை தலைவருக்கு சுகாதார மருத்துவக் காப்புறுதி ஒன்றை வழங்குதல். சனாதிபதி செயலாளரின் 2022 செப்தெம்பர் 27 ஆந் திகதிய இலக்கம் PS/CSA/11/18(I) மற்றும் 2022 ஒக்தோபர் 28 ஆந் திகதிய இலக்கம் PS/CSA/11/18/(II) என்ற அரச செலவின முகாமைத்துவம் - மாகாண சபை சுற்றறிக்கையின் மூலம் மாகாண சபைத் தலைவருக்கு செலுத்த வேண்டிய படிகள் தொடர்பாக தெளிவாகக் காண்பிக்கப்பட்டிருந்த போதும் 2022 ஆம் ஆண்டின் போது நாட்டில் காணப்பட்ட நிதி நெருக்கடியின் இடையே சனாதிபதி செயலாளரால் மாகாண சபைகளின் அரச செலவின முகாமைத்துவத்திற்காக மேலே குறிப்பிடப்பட்ட சுற்றறிக்கையின் மூலம் செலவினங்களை வரையறுப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு ஆலோசனை வழங்கப்பட்டிருக்கும் போது தென் மாகாண சபையின் தலைவருக்கு மருத்துவக் காப்புறுதி ஒன்றை வழங்குவதற்காக மாகாண சபை நிதியத்தில் இருந்து ரூபா 104,818 தொகை செலுத்தப்பட்டிருந்தது. | தென் மாகாண பிரதம செயலாளரால் 2011 ஏப்ரல் 20 ஆந் திகதி சமர்ப்பிக்கப்பட்ட மாகாண சபை உறுப்பினர்களுக்கான காப்புறுதி முன்மொழிவுத் திட்டத்தை அமுல்படுத்துதல் தொடர்பாக அமைச்சரவைத் தீர்மானம் 566 இன் பிரகாரம் தலைவரின் மருத்துவக் காப்புறுதி முன்மொழிவுத் திட்டம் தொடர்ச்சியாக அமுல்படுத்தப்பட்டதுடன் ஆளுநரின் அங்கீகாரத்தின் பிரகாரம் தென்மாகாண தலைவரின் 2023 ஆம் ஆண்டிற்கான வருடாந்த மருத்துவக் காப்புறுதி முன்மொழிவுத் திட்டத்திற்காக நிதியத்தில் இருந்து செலவிடப்பட்டிருந்தது. | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ii) | 2010 ஆகஸ்ட் 09 ஆம் திகதிய தென் மாகாண ஆளுநரின் செயலாளரின் இலக்கம் G/SP/1/57 தொகுதி 01 என்ற கடிதத்திற்கு இணங்காத வகையில் 2020 ஆகஸ்ட் மாதம் முதல் 2022 ஒக்தோபர் மாதம் வரையான காலத்திற்கு உரிய தென் மாகாண சபையின் தலைவருக்கு வீடு ஒன்றை வாடகைக்குப் பெற்றுக் கொள்வதற்காக ரூபா 1,350,000 படி சபை செயலகத்தால் செலுத்தப்பட்டிருந்தது. | 2022 ஆம் ஆண்டில் விநியோகிக்கப்பட்ட பீஎஸ்/சீஎஸ்ஏ/11-18(1) மற்றும் பீஎஸ்/சீஎஸ்ஏ/11-18(11) சுற்றறிக்கையின் பிரகாரம் 2022 ஒக்தோபர் மாதம் முதல் இந்த படி செலுத்துதல் நிறுத்தப்பட்டுள்ளது. | ஆலோசனைக் கடிதத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (iii) | 2018 ஒக்தோபர் 12 ஆந் திகதிய இலக்கம் PS/CSA/11-18 சுற்றறிக்கையின் 1 ஆம் பந்தியின் பிரகாரம் மாகாண சபை கலைக்கப்பட்ட பின்னர் அலுவலகப் படி செலுத்த முடியாது இருந்த போதிலும் தென் மாகாண சபையின் தலைவருக்கு 2019 ஒக்தோபர் மாதம் முதல் 2022 ஒக்தோபர் மாதம் வரை அலுவலகப் படியாக ரூபா 1,850,000 சபை செயலகத்தால் செலுத்தப்பட்டிருந்தது. | 2022 ஆம் ஆண்டில் விநியோகிக்கப்பட்ட பீஎஸ்/சீஎஸ்ஏ/11-18(1) மற்றும் பீஎஸ்/சீஎஸ்ஏ/11-18(11) சுற்றறிக்கையின் பிரகாரம் 2022 ஒக்தோபர் மாதம் முதல் இந்த படி செலுத்துதல் நிறுத்தப்பட்டுள்ளது. | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (iv) | தென் மாகாண சபையின் தலைவருக்கு பெற்றோல் வாகனம் ஆயின் மாதம் ஒன்றுக்கு 600 லீற்றரும், டீசல் வாகனம் ஆயின் மாதம் ஒன்றுக்கு 500 லீற்றரும் வழங்க வேண்டி இருந்தமை காண்பிக்கப்பட்டிருக்கும் போது அந்த ஏற்பாடுகளை மீறி மாதம் ஒன்றுக்கு டீசல் 600 லீற்றர் வீதம் வழங்கப்பட்டமையால் 2019 யூலை மாதம் முதல் 2022 செப்தெம்பர் மாதம் வரை 2018 ஒக்தோபர் 12 ஆம் திகதிய இலக்கம் PS/CSA/11-18 என்ற சுற்றறிக்கை 4.1 இன் ஆலோசனைகளுக்கு இணங்காத வகையில் டீசல் லீற்றர் 3,900 இற்காக ரூபா 708,000 தொகையில் சுப்பிரி டீசல் விலை வீதத்தை அடிப்படையாகக் கொண்டு செலுத்தப்பட்டமையால் ரூபா 682,525 மேலதிக கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டிருந்தது. | தற்போது தலைவருக்கு வழங்கப்பட்டுள்ள வாகனம் தவிர சபை செயலகத்தின் குழாம் மற்றும் ஒதுக்கப்பட்ட வாகனங்களுக்கு 2023 ஏப்ரல் 01 ஆம் திகதி முதல் சராசரி டீசல் / பெற்றோல் விலை வீதத்தை அடிப்படையாகக் கொண்டு எரிபொருள் படி செலுத்தப்பட்டுள்ளது. | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (v) | 2018 ஒக்தோபர் 12 ஆந் திகதிய இலக்கம் PS/CSA/11-18 என்ற சுற்றறிக்கையின் 4.2 ஆம் பந்திக்கு முரணாக தென் மாகாண சபையின் தலைவரின் இணைப்பாளர் மற்றும் பொது மக்கள் இணைப்பு செயலாளருக்கு 2019 ஒக்தோபர் மாதம் முதல் 2022 ஒக்தோபர் மாதம் வரை மாதம் ஒன்றுக்கு ரூபா 50,000 வீதம் ரூபா 3,700,000 ஆன வாகன படி ஒன்றும், உத்தியோக பூர்வ வாகனங்கள் வழங்கப்படாது இருக்கும் போது 2019 ஆகஸ்ட் முதல் 2022 ஒக்தோபர் வரை ரூபா 2,516,680 எரிபொருள் படியும் சபை செயலகத்தால் செலுத்தப்பட்டிருந்தது. | சனாதிபதி செயலாளரின் பீஎஸ்/சீஎஸ்ஏ/11-18 என்ற அரச செலவின முகாமைத்துவ சுற்றறிக்கையின் 4.2 ஆம் பிரிவின் பிரகாரம் மாகாண சபை தலைவரின் உதவிப் பதவியணியினரின் உத்தியோகபூர்வ வாகனத்திற்காக சுற்றிக்கை எல்லையின் கீழ் மாதத்தின் முதலாவது திகதி உள்நாட்டு சந்தையில் காணப்படுகின்ற எரிபொருளின் பெறுமதிக்கு சமமான தொகை ஒன்று எரிபொருள் படியாக செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 1.5.3 தலைப்பு 302 – தென்மாகாண அரசாங்க சேவை ஆணைக்குழு

**(அ) சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை**

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| 2022 திசெம்பர் 14 ஆந் திகதிய இலக்கம் 2310/29 என்ற அரசாங்க சேவை | தொடர்புடைய பணி நடைமுறை விதியின் பிரகாரம் தென் மாகாணத்திற்கு உரிய | இது தொடர்பாக ஆளுநரின் கட்டளைக்காக | அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் |

| | | | |
|---|---|---|---|
| ஆணைக்குழு வின் பணி நடைமுறை விதி 41 | அங்கீகரிக்கப்பட்ட சேவைப் பிரமாணத்தின் 10 தொடர்பான தகவல்கள் வர்த்தமாணியில் பிரசுரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | அனுப்பப்பட்டுள்ளதுடன் அங்கீகாரம் கிடைத்த பின்னர் மிகுதி நடவடிக்கைகள் எடுக்கப்படும். | பணி நடைமுறை விதியின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**(ஆ) முகாமைத்துவ செயற்திறனின்மைகள்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|
| 2023 நவம்பர் 18 ஆந் திகதி நடைபெற்ற தென்மாகாண சபைப் பாடசாலைகளில் 56 பாடங்களுக்கு உரிய சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழி ஆசிரியர்களின் வெற்றிடங்கள் 3,230 இற்காக இலங்கை ஆசிரியர் சேவையில் 3 ஆவது வகுப்பின் 1(அ) தரத்தின் ஆட்சேர்க்கும் போட்டிப் பரீட்சை வினாப்பத்திரங்களை தயாரித்தல் மற்றும் மதிப்பீட்டு நடவடிக்கைகளில் தென் மாகாண கல்வி அமைச்சு மற்றும் கல்வி திணைக்களத்தின் சகல உத்தியோகத்தர்களையும் விலக்கி தென் மாகாண சபையின் ஏனைய அமைச்சு மற்றும் திணைக்களங்களின் உத்தியோகத்தர்கள் தொடர்பு படுத்தப்பட்டிருந்தனர். சாதாரண நேர்முகப் பரீட்சை மற்றும் பிரயோக பரீட்சைகளுக்காக கல்வி அமைச்சு மற்றும் கல்வி திணைக்களத்தின் உத்தியோகத்தர்கள் தொடர்புபடுகின்றமையால் விடைப் பத்திரங்கள் மதிப்பீட்டுக்கு அவர்களை தொடர்புபடுத்த முடியாது என தீர்மானிக்கப்பட்டிருந்தது. | ஆசிரியர் வெற்றிடங்களுக்காக பட்டதாரிகளை ஆட்சேர்த்தல் தொடர்பாக அறிவித்திருக்கும் போது இனங்காணப்பட்டிருந்த வெற்றிடங்களின் எண்ணிக்கையை விஞ்சி நியமனங்கள் வழங்கப்பட்டமை, வெற்றிடங்கள் காணப்பட்டமை இனங்காணப்பட்டிருந்த சில பாடசாலைகளில் வெற்றிடங்கள் நிரப்பப்படாமை, பரீட்சைப் பெறுபேறு அட்டவணையின் பேர் குறிப்பிடப்படாத பட்டதாரிகளுக்கு நியமனம் வழங்கப்பட்டமை, புள்ளிகள் பெற்றிருந்த ஒழுங்கு முறையின் பிரகாரம் விண்ணப்பதாரர்கள் தெரிவின் அடிப்படையில் ஆட்சேர்ப்புக்கள் மேற்கொள்ளப்படாமல் மற்றும் வர்த்தமாணி அறிவித்தல் குறிப்பிடப்பட்ட பாட தகைமைகள் காணப்படாத 12 விண்ணப்பதாரர்களுக்கு நியமனங்கள் வழங்கப்பட்டிருந்தமை போன்ற விடயங்கள் தெரிவுக் கணக்காய்வு பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்டது. | ஆட்சேர்ப்பு அறிவித்தலின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**(இ) சரச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|
| அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவினால் 2023 மற்றும் 2024 ஆம் ஆண்டுகளில் நடாத்தப்பட்ட தென்மாகாணத்தின் பல்வேறு பதவிகளுக்கு ஆட்சேர்க்கும் போட்டிப் பரீட்சை, வினைத்திறமை காண் தடைப் பரீட்சைகளுக்கு உரிய வினாப்பத்திரங்களைத் தயாரித்தல் மற்றும் மதிப்பிடுவதற்காக வளவாளர்களுக்கு முறையே 3,937,881 மற்றும் ரூபா 1,314,332 | 2024 யூன் 26 ஆந் திகதிய ஆணைக்குழு தீர்மானத்திலும் மீண்டும் ஆணைக்குழுவின் கவனம் செலுத்தப்பட்டதுடன் வளவாளர்கள் குழு கண்காய்விற்கு வழங்க வேண்டி இருந்ததுடன் 2025 பெப்ரவரி 05 ஆம் திகதி | கணக்காய்வு நடவடிக்கைகளுக்கு தேவையான தகவல்கள் உரிய பிரகாரம் பெற்றுக் கொள்ளும் பொறுப்பை நிறைவேற்றுதல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| செலுத்தப்பட்டிருந்ததுடன் அந்த போட்டிப் பரீட்சைகளில் வினாப்பத்திரங்கள் தயாரித்தல் மற்றும் மதிப்பீடுகளுக்கு உரிய வளவாளர்கள் குழு ஆணைக்குழுவின் பரீட்சை பிரிவின் அனுபவத்தின் அடிப்படையில் மாத்திரம் காணப்படுகின்ற இரகசிய ஆவணம் ஒன்றாக இருந்தமையால் கணக்காய்வு உத்தியோகத்தர்களையும் உள்ளடக்கிய வெளித்தரப்பினர்களுக்கு அந்த தகவல்கள் வழங்காது இருப்பதற்கு நடவடிக்கை எடுத்ததன் அடிப்படையில் தென் மாகாண அரசாங்க சேவை ஆணைக்குழு கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் விடயப் பரப்பை வரையறுத்தல் மற்றும் அரசியலமைப்பின் 154 ஆவது உறுப்புரையில் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு கிடைத்துள்ள தகவல்களை பெற்றுக் கொள்ளும் உரித்து இழக்கப்படுகின்ற முறையில் நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. அவ்வாறே தென் மாகாணத்தின் பல்வேறு பதவிகளுக்கு ஆட்சேர்க்கும் போட்டிப் பரீட்சை மற்றும் வினைத்திறமை காண் தடைப் பரீட்சைகளுக்கு உரிய வினாப் பத்திரங்களை தயாரித்தல் மற்றும் மதிப்பிடுவதற்காக வளவாளர்களை தெரிவு செய்தல் தொடர்பான முறையான கணக்காய்வுப் பரிசோதனை ஒன்றை நடாத்துவதற்கு முடியாதிருந்தமையால் பரீட்சைகளை நடாத்துதல் தொடர்பாக ஏற்பட்டிருந்த குறைபாடுகள் காணப்படுகின்ற பிரச்சனைகள் மற்றும் அந்த நடவடிக்கைகள் சுயாதீனத் தன்மை மற்றும் வெளிப்படைத் தன்மைகளை உள்ளடக்கிஅ து தொடர்பான செயற்பாடுகளில் காணப்படுகின்ற பிரச்சனைகளை ஆய்வு செய்வதற்கு கணக்காய்வின் போது முடியாது இருந்தது. | நடைபெற்ற ஆணைக்குழுவின் போது தீர்மானிக்கப்பட்டிருந்தது. | |

## (ஈ) முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|
| மாகாண அரசாங்க சேவை ஆணைக்குழுவின் பதவியணியினருக்கு பிரதான உள்ளபடியான பணிப் பொறுப்புக்களை நிறைவேற்றும் போது முறையான அங்கீகாரத்தின் அடிப்படையில் விடுமுறை தின சம்பளம் மற்றும் மேலதிக நேரப் படிகள் பெற்றுக் கொள்வதற்கு முடியுமாக இருக்கும் போது ஆணைக்குழுவினால் நடத்தப்படுகின்ற பரீட்சைகளின் விண்ணப்ப பத்திரங்களுடன் கடித உறைகளை திறத்தல் மற்றும் பரீட்சித்தல், கணனி மயப்படுத்துதல் மற்றும் பெயர் பதிவேட்டைத் தயாரித்தல், நுழைவு அனுமதிப் பத்திரங்களை தயாரித்தல் | துண்டுக் கூலி அடிப்படையில் இந்த குறித்துரைத்த அளவிற்கு மேலதிகமாக மேற்கொள்ளப்படுகின்ற கடமைகளுக்கு மாத்திரம் அதனுடன் தொடர்புபட்ட பதவியணியினருக்கு செலுத்துவதற்கு ஆளுநர் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளதுடன் அரசாங்க சேவை | முறையான அங்கீகாரத்தின் கீழ் கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்படல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| மற்றும் தபாலில் இடல் போன்ற பணிகளை நிறைவேற்றுவதற்கு பதவியணியினருக்கு ஊக்குவிப்புப் படி ஒன்று அங்கீகரிக்கப்பட்டு தென் மாகாண சபை பாடசாலைகளில் காணப்படுகின்ற ஆசிரியர் வெற்றிடங்களுக்காக பட்டதாரிகளை ஆட்சேர்க்கும் திறைந்த போட்டிப் பரீட்சைக்கு தொடர்புபட்ட பதவியணியினருக்கு கூட்டுமொத்தமாக ரூபா 337,636 ஊக்குவிப்புப் படி செலுத்தப்பட்டதுடன் மேற்கூறப்பட்ட பரீட்சைகளின் கடமை நடவடிக்கைகளை நிறைவேற்றுவதற்காக அந்த உத்தியோகத்தர்களுக்கு ரூபா 80,150 விடுமுறை தினப் படியும் ரூபா 273,838 மேலதிக நேரப் படியும் அவர்களுக்கு அதே வகையில் படியாக செலுத்தப்பட்டிருந்தது. | ஆணைக்குழுவின் பதவியணியினருக்கு ஊக்குவிப்புப் படி ஆளநரின் அங்கீகாரத்தை பெற்று செலுத்தப்பட்டிருந்தது. | |

**1.5.4 தலைப்பு 304 – தென் மாகாண பிரத அமைச்சு மற்றும் நிதி மற்றும் திட்டமிடல், சட்டம் மற்றும் சமாதானம், உள்ளூராட்சி, போக்குவரத்து, சுகாதாரம் மற்றும் உள்நாட்டு மருத்துவம், சுற்றுலா மற்றும் பொறியியல் சேவைகள் அமைச்சு**

**(அ) முகாமைத்துவ செயற்திறனின்மைகள்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (i) | தக்சனாபாய கட்டிடத் தொகுதியின் அமைச்சு உள்ளடக்கிய நிறுவனங்களில் கணனி வலையமைப்பிற்காக 2014 ஆம் ஆண்டின் போது ரூபா 5,380,634 தொகை செலவிடப்பட்டதுடன் 2018 ஆம் ஆண்டு முதல் 2023 ஆம் ஆண்டு வரை வருடாந்த சேவையிடல், பராமரித்தலுக்காக ரூபா 11,401,133 தொகையும் இணையதள சேவைகளை வழங்கியதற்காக ரூபா 13,792,564 தொகையும் மற்றும் Firewall முறைமையை கொள்வனவு செய்தல் மற்றும் வருடாந்த அனுமதிப் பத்திரத்தை பெற்றுக் கொள்வதற்காக ரூபா 9,041,122 தொகையும் பிரதம அமைச்சினால் தனியார் ஒன்றுக்கு செலுத்தப்பட்டிருந்தது. | | |
| (ஏ) | தக்சினாபாய கணனி வலையமைப்பை பராமரித்தல் தொடர்பாக கணனி நிகழ்ச்சித் திட்டத்தில் இருந்து வளவாளர்களின் மேற்பார்வை மற்றும் தென் மாகாண சபை கணனி வலையமைப்பு தொடர்பான மேற்பார்வை மற்றும் நிர்வகித்தலுக்காக நியமிக்கப்பட்ட ஆலோசனையாளரின் | ஏற்படுகின்ற பிரச்சனைகள் தகவல் தொழில் நுட்ப உதவி உத்தியோகத்தருக்கு அறிக்கையிடப்பட்ட பின்னர் தேவையான தீர்வுகள் வழங்கப்பட்டதுடன் தீர்க்கப்படாது உள்ள பிரச்சனைகள் பிரதம | மேற்பார்வை மற்றும் நிர்வாகத்திற்காக தேவையான ஆலோசனைகளைப் பெற்று முறைமையின் தேவையின் இயலளவைத் தீர்மானித்து |

| | | | |
| --- | --- | --- | --- |
| | பரிந்துரையை பெற்றுக் கொள்ளாமல் கடிதம் முகாமைத்துவ முறைமையை அமுல்படுத்துவதற்காக இணையதள சேவை இயலளவு 20 MBPS முதல் 40 MBPS வரை அதிகரித்துக் கொள்வதற்காக 2021 ஒக்தோபர் 29 ஆம் திகதி பிரதம அமைச்சு செயலாளரினால் கோரப்பட்டிருந்ததுடன் பிரதம செயலாளரால் அதற்காக 2021 நவம்பர் 11 ஆந் திகதிய கடிதம் மூலம் மிகுதி தேவைகளின் அடிப்படையில் அந்த இயலளவு குறைத்தல் அல்லது அதிகரித்துக் கொள்வதற்கு தேவையான அதிகாரம் பிரதம அமைச்சின் செயலாளருக்கு கையளித்து அதற்காக அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்த போதிலும் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்காமல் 2021 திசெம்பர் மாதம் முதல் 2024 யூன் வரை மாதாந்த இயலளவு 20 MBPS வீதம் இயலளவு 420 MBPS ரூபா 3,104,535 தொகை தேவையற்ற பிரகாரம் பிரதம அமைச்சினால் செலவிடப்பட்டிருந்தது. | அமைச்சின் தகவல் தொழில் நுட்ப உதவி உதவி உத்தியோகத்தர்கள் மற்றும் கணனி நிகழ்ச்சித் திட்ட வளவாளருக்கும் அவ்வாறு இல்லையாயின் சேவை வழங்குனர் நிறுவனத்திற்கும் அனுப்பி தீர்வு மேற்கொள்ளப்பட்டதுடன் இணையதள சேவையின் வேகத்தை அவதானிப்பதற்காக 24 மணி நேரம் அமுல்படுத்தப்படுகின்ற இணையவழி நுழைவும் காணப்படுகின்றது. | முறைமையை செயற்படு நிலையில் கொண்டு வருவதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (பி) | கணனி வலையமைப்பு மேற்பார்வை மற்றும் கட்டுப்படுத்தல் தொடர்பான ஒழுங்குபடுத்துதலுக்காக தற்காலிகமாக ஆலோசனையாளர் ஒருவரை நியமிக்கப்பட்ட போதும் மேற்கூறப்பட்ட கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டிருக்கும் போது கணனி வலையமைப்பு முறைமையில் தற்போதய இருப்பு , கால ரீதியிலான தன்மை தொடர்பாக ஆலோசனையாளரிடம் இருந்து அறிக்கையினைப் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. | கணனி வலையமைப்பு முறைமை ஸ்தாபிக்கும் வரை உரிய ஆலோசனையாளர் சேவை பெறப்பட்டதுடன் உரிய சேவை வழங்கப்படுகின்ற காலத்தின் போது அந்த முறைமைக்காக ஆலோசனையாளர்கள் வழங்கப்படவில்லை. | கொடுப்பனவு செய்யும் போது முறைமை தற்போதய இருப்பு மற்றும் கால ரீதியான தன்மை தொடர்பாக ஆலோசனையாளரிடம் இருந்து அறிக்கை ஒன்றைப் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ii) | அக்குரஸ்ஸ சுகாதார மருத்துவ உத்தியோகத்தர் அலுவலகம் அமைந்துள்ள காணி மற்றும் பரதுவ கிராமோதய சுகாதார நிலையம் அமைந்துள்ள காணி என்பவற்றைக் கைப்பற்றுவதற்காக தென்மாகாண பிரதான மதிப்பீட்டாளரிடம் இருந்து 2018 ஆம் ஆண்டின் போது மதிப்பீட்டு அறிக்கை பெறப்பட்டு 07 வருடங்களுக்கு மேற்பட்ட காலம் கடந்திருந்த போதிலும் அந்தக் காணியைக் கையேற்காமையினால் 2023 ஆம் ஆண்டின் போது மேற்கொள்ளப்பட்ட காணிக்காக பெறப்பட்டிருந்த புதிய | இந்தக் காணியை கைப்பற்றும் செயற்பாடுகளில் ஆவணங்கள் பரிமாற்றல் தாமதம் அடைந்தமை மற்றும் எதிர்காலத்தில் இவ்வாறான நிலைமை ஏற்படாமல் இருப்பதற்கு உரிய உத்தியோகத்தர்களுக்கு அறிவிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | காணி கைப்பற்றும் நடவடிக்கைகளை விரைவாக பூர்த்தி செய்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | மதிப்பீட்டுப் பெறுமதி ரூபா 6,275,000 இனால் அதிகரித்து இருந்தது. | | |
| (iii) | ரஸ்ஸகுணபிரி வெளிப்படுத்தும் மருந்து மூலிகைத் திட்டத்தின் கீழ் உள்நாட்டு உணவு வகை மற்றும் மருந்து வகைகளை தென் மாகாணத்து மக்களுக்கு இடையே அறிமுகப்படுத்தி அவர்களின் சுகாதார தரத்தை கட்டியெழுப்பும் அரசாங்கக் கொள்கையின் பிரகாரம் திவிநெகும நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் குறைந்த வருமானம் பெறும் குடும் அலகுகள் சிலவற்றிக்கு வருமானத்தை மேம்படுத்தும் நோக்காகக் கொண்டு பிரதம அமைச்சினால் 2013 மற்றும் 2015 ஆம் ஆண்டுகளின் போது தெரிவு செய்யப்பட்ட நலனாளிகளுக்கு வழங்கப்பட்ட பைசிக்கிள் பெக் வண்டிகள் 05 மற்றும் ஒரு முச்சக்கர வண்டிக்காக அறவிட வேண்டி இருந்த ரூபா 716,000 தொகை மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. | பிரதம செயலகத்தின் சட்ட பிரிவிற்கு அனுப்பப்பட்டுள்ளதுடன் அறவிட வேண்டிய பணத்தை அறவிடுவதற்கு உரிய சட்ட பிரிவின் ஆலோசனையின் அடிப்படையில் மிகுதி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றது. | அறவிடும் நடவடிக்கைகளை விரைவாக பூர்த்தி செய்தல் வேண்டும். |

**(ஆ) ஒப்பந்த நிர்வாகத்தில் குறைபாடுகள்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (i) | தென் மாகாண பிரதம அமைச்சினால் காலி அதி வேக பேருந்து தரப்பிடத்தில் மழை வெயில் மேவுகை செய்வதற்கு நிர்மாணிப்பதற்குரிய கேள்வியின் போது கூரைப் பகுதியில் ஈடுபடுத்த வேண்டிய 22 mm பொலிக்கா கென் சீட் சந்தையில் காணப்படாது இருந்தமையால் அதனை விடக் குறைந்த தடிப்பம் உடைய பொலிக்கா பநெட் சீட் ஈடுபடுத்தப்படுத்தப்பட்டதாக குறிப்பிடப்பட்டு ஆகக் குறைந்த கேள்வி தாரருக்கு ஒப்பந்தம் வழங்காமையினால் ரூபா 373,992 நட்டம் ஏற்பட்டதுடன் மழை வெயில் மேவுகையின் பின் பக்கம் மற்றும் ஒரு பக்கத்தில் மதிப்பீட்டில் குறிப்பிடப்பட்ட 10 mm தடிப்பம் உடைய பொலிக்காபநேட் சீட் இற்காக 4 mm தடிப்பம் உடைய பொலிக்காபநேட் சீட் பயன் படுத்தியமையை உள்ளடக்கிய 11 வேலை விடயங்களுக்காக ரூபா | 10 mm பொலிக்காபநேட் சீட் பயன்படுத்தும் போது மேலதிக செலவினம் செய்ய வேண்டியிருந்தமையாலும், 4 mm பொலிக்காபநேட் சீட் ஈடுபடுத்தல் பொருத்தமானதாக இருந்தமையாலும் நகர அபிவிருத்தி அதிகார சபையின் கட்டிட கலைஞர்களுடன் கலந்துரையாடி மதிப்பீடு விரைவாக பெற வேண்டி இருந்தமையாலும் கூறுவிலைகள் பெற்று விசேட விலை பகுப்பாய்வு தயாரிப்பதற்கு கால தாமதம் காணப்படாமையாலும் Provisional Sum ஈடுபடுத்தி மதிப்பீட்டினால் உரிய பொருட்கள் கொள்வனவு செய்யப்பட்டு பட்டியலின் | நியமத்தை உறுதிப்படுத்தி கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | 699,840 தொகை ஒப்பந்தகாரருக்கு மேலதிகமாக செலுத்தப் பட்டிருந்ததுடன் மேலும் தடிப்பமான 22 mm பொலிக்காபநேட் சீட் ஈடுபடுத்தப்பட்டமை உறுதிப்படுத்தப்படாமல் அதற்குரிய மதிப்பீடு செய்யப்பட்ட தொகையான ரூபா 1,305,120 தொகையும் செலுத்தப்பட்டிருந்தது. | பிரகாரம் சந்தையில் காணப்படுகின்ற ஒப்பீட்டு விலையினைப் பரீட்சித்து பட்டியல்களில் உள்ளடக்கப்பட்டுள்ளது. | |
| (ii) | தென் மாகாண பிரதம அமைச்சினால் ரூபா 25,458,409 தொகை செலவில் 2019 ஏப்ரல் 22 ஆம் திகதி வேலைகள் பூர்த்தி செய்யப்பட்ட யசோராபுர தகவல் நிலையத்தை நிர்மாணிக்கும் போது நியமத்தில் இல்லாத மூலப் பொருட்கள் பயன்படுத்தப்பட்ட போதும் நியமத்துடனான மூலப் பொருள் விலை வீதத்தில் செலுத்தப்பட்டமையால் ரூபா 6,302,940 மேலதிகமாக ஒப்பந்தகாரருக்கு செலுத்தப்பட்டதுடன் அந்த நிர்மாணங்கள் குறைவாகப் பயன்படுத்தப்பட்டமையால் அதற்காக செலவிடப்பட்ட மொத்த தொகையும் விளைவற்றதாக இருந்தது. | காணியின் உரித்து தென் மாகாண பிரதம அமைச்சுக்கு கையளிக்கப்பட்ட பின்னர் ஆக்கபூர்வமான பணிகளுக்கு ஈடுபடுத்துவதற்குரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும். | பயன்பாடுள்ள சொத்து ஒன்றாக உட்படுத்துவதற்கு தேவையான நடவடிக்கைகள் விரைவாக எடுக்கப்படல் வேண்டும். |

### 1.5.4.1 தென் மாகாண பிரயாணிகள் போக்குவரத்து அதிகார சபை

#### (அ) கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (i) | அம்பாந்தோட்டை மாவட்டத்தில் லுனுகம்பெகர பேருந்து நிலையத்தை நிர்மாணித்தல் பெறுமதி ரூபா 20,778,835 ஆக இருந்த போதிலும் நிதிக்கூற்றுக்களில் ரூபா 1,200,000 ஆக காண்பிக்கப்பட்டமையால் கட்டிடத்தின் பெறுமதி ரூபா 19,578,835 இனால் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது. | மாகாண இறைவரித் திணைக்களத்தின் மதிப்பீட்டின் பிரகாரம் குறிப்பிடப்பட்டுள்ளதுடன் மீண்டும் மாகாண இறைவரி ஆணையாளரிடம் விசாரித்து மிகுதி நடவடிக்கைகள் எடுக்கப்படும். | சொத்துக்களின் சரியான பெறுமதி கணக்கீடு செய்யப்படல் வேண்டும். |
| (ii) | ரூபா 13,200,000 பெறுமதி உடைய ஹபராதுவ பேருந்து நிலைய காணி மீளாய்வாண்டின் ஏப்ரல் 08 ஆந் திகதி தென் மாகாண பிரதம அமைச்சுக்கு கையளிக்கப்பட்ட போதிலும் அப் பெறுமதி நிதிக்கூற்றுக்களில் நீக்கப்பட்டிருந்தது. | காணியின் உரித்து பிரதம அமைச்சுக்கு கையளிக்கப்பட்ட போதும் பயன்படுத்துவதற்காக அதிகார சபையினால் மேற்கொள்ளப்படுகின்றமையால் நிதிக்கூற்றுக்களில் அகற்றப்பட்டுள்ளதுடன் அது தொடர்பாக பிரதம அமைச்சிடம் விசாரணை செய்து மிகுதி நடவடிக்கைகள் எடுக்கப்படும். | சொத்துக்கள் சரியாக இனங்கண்டு கணக்கீடு செய்யப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (iii) | காலி பேருந்து நிலையத்தில் பொருத்தப்பட்டிருந்த சூரிய கல முறைமை 02 இன் பெறுமதி ரூபா 3,200,000 ஆக இருந்த போதிலும் ரூபா 1,600,000 ஆக குறிப்பிடப்பட்டமையால் நடைமுறையல்லாச் சொத்துக்கள் ரூபா 1,600,000 இனால் குறைத்துக் காண்பிக்கப்பட்டதுடன் பெறுமானத் தேய்வு செலவினமும் குறைத்துக் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | காலி பேருந்து நிலையத்தில் மீற்றர் 01 மற்றும் 02 இன் கீழ் கிலோ வோட்ஸ் 08 வீதம் சூரிய கல முறைமை 02 இன் கீழ் 16 கிலோ வோட்ஸ் பொருத்தப்பட்டுள்ளதுடன் அப் பெறுமதி ரூபா 1,600,000 ஆகும். | சொத்துக்கள் சரியாக இனங்கண்ட கணக்கீடு செய்யப்படல் வேண்டும். |
| (iv) | ரூபா 7,590,000 பெறுமதி உடைய முச்சக்கர வண்டி, பாடசாலை சேவை மற்றும் அலுவலக சேவை ஒழுங்குபடுத்தல் மென் பொருளுக்காக மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதி வரையில் செலுத்தப்படாது இருந்த ரூபா 1,518,000 பெறுமதி நடைமுறைப் பொறுப்பாக குறிப்பிடப்பட்டிருக்கவில்லை. | இவ்வாறான வழுக்களை தடுப்பதற்காக கணக்கீட்டு நடவடிக்கைகளுடன் தொடர்புடைய நிறுவனத்தின் உத்தியோகத்தர்களை பயிற்சிகளை வழங்கி எதிர் காலத்தில் இவ்வாறான பிழைகள் ஏற்படாமல் இருப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நடைமுறைப் பொறுப்புக்கள் சரியாக இனங்கண்டு கணக்கீடு செய்யப்படல் வேண்டும். |

**(ஆ) சட்டங்கள் விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை**

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| நிதி விதி 131.3 | தொடர்புடைய விதிகளுக்கு இணங்காத வகையில் தென் மாகாண பிரயாணிகள் போக்குவரத்து அதிகார சபையில் உறுதிப்படுத்தும் உத்தியோகத்தராக பணிப்பாளர் (நிதி) இனால் நிதி அதிகாரத்தை விஞ்சிய பெறுமதியுடன் 115 உறுதிச்சீட்டுக்களில் கூட்டுமொத்தமாக ரூபா 8,311,139 இற்காக செலவினங்கள் உறுதிப்படுத்தப்பட்டிருந்தது. | அச்சிடல் வழுவின் காரணமாக ஏற்பட்டுள்ளதுடன் அதற்காக உரிய பிரகாரம் பிரதம அமைச்சின் செயலாளரிடம் அதிகாரம் கையளிக்கப்பட்டுள்ளது. | நிதி விதியின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**(இ) முகாமைத்துவ செயற்திறனின்மைகள்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|
| GPS தொழில் நுட்ப பேருந்து சேவை முகாமைத்துவத்திற்காக ஈடுபடுத்தல் தொடர்பான செயற்திட்ட அறிக்கையின் படி சகல பிரயாண தடவைகளிலும் ஆகக் | சகல பிரயாணத் தடவைகளும் தாமதம் அடைந்ததற்காக தண்டப் பணம் அறவிடல் நடைமுறையில் வசதியீனமாக | 1996 இன் 02 ஆம் இலக்க தென் மாகாண பிரயாணிகள் போக்குவரத்து |

| | | |
|---|---|---|
| குறைந்தது 05 நிமிடங்கள் வீதம் தினம் ஒன்றுக்கு 13,000 பிரயாண தடவைகள் தாமதம் அடைந்தமையால் ஆண்டின் போது தென் மாகாணத்திற்கு 3,250,000 நிமிடங்கள் இழக்கப்பட்டிருந்தமை காண்பிக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் இந்த தாமதமான ஒரு பிரயாணத் தடவைக்காக 1996 இன் 02 ஆம் இலக்க தென் மாகாண பிரயாணிகள் போக்குவரத்து அதிகாரி தொடர்பான விஞ்ஞாபனத்தின் பிரகாரம் தண்டப்பணம் அறவிடப்படுமாயின் ஆகக் குறைந்தது வருடம் ஒன்றுக்கு ரூபா 949 மில்லியன் தண்டப் பணம் அறவிட முடியுமாக இருந்த போதிலும் தாமதக் கட்டணமாக ரூபா 3,343,893 மாத்திரம் மீளாய்வாண்டின் போது அறவிடப்பட்டிருந்தது. | இருந்ததுடன் தொழில் நுட்பத்தை பயன்படுத்தி பிரயாணத் தடவைகளின் தாமதங்களைக் குறைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் இந்த செயற்திட்டத்தில் இருந்து எதிர்பார்க்கப்பட்டுள்ளது. | அதிகார சபை தொடர்பான விஞ்ஞாபனத்தின் பிரகாரம் தண்டப் பணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**(ஈ) முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|
| (i) 70,000 முச்சக்கர வண்டிகள், 1,500 பாடசாலைப் பேருந்து வண்டிகள் மற்றும் அலுவலக போக்குவரத்து சேவையில் 400 வண்டிகள் பதிவினை எதிர்பார்த்து பெறப்பட்டிருந்த இணையதள உள்ளீடு பெறுகைகளுக்கு உரிய பெறுகை தீர்மானத்தின் படி 05 வருட கால உத்தரவாதத்துடன் பெறப்படாது இருந்த 05 வருடங்கள் அனுபவம் உள்ள நிறுவனம் ஒன்றாகக் காண்பித்து ஒப்பந்தம் கையளிப்பதற்கு 06 மாதங்களுக்கு முன் பதிவு செய்த நிறுவனம் ஒன்றிற்கு 05 வருடங்கள் முழுவதும் செலுத்த வேண்டிய ரூபா 7,590,000 தொகையில் 80 சதவீதம் முதலாவது செலுத்தப்பட்டதுடன் இந்த இணையதள உள்ளீடு 1 ½ வருடத்தில் 1,712 முச்சக்கர வண்டிகள் அதாவது 3 சதவீதத்தின் செயலாற்றல் மாத்திரம் அடையப்பட்டிருந்தமையும் புதிய தலைவரால் தயாரிக்கப்பட்ட ஐந்து வருட சேவை உடன்படிக்கையுடன் பணிப்பாளர் நாயத்தால் மேற்கூறப்பட்ட செயலாற்றல் காணப்படுவதாகக் குறிப்பிட்டு எஞ்சியிருந்த 20 சதவீத தவணைப் பணமான ரூபா 1,518,000 தொகை செலுத்தப்பட்டிருந்தது. அவ்வாறே அனுபவம் இன்றிய நிறுவனத்திற்கு 97 சதவீத செயலாற்றலலும் பெற்றுக் கொள்ளப்படாது இருக்கும் போது மொத்த தொகையையும் விடுவித்தன் மூலம் நிதி விடயம் 84 – 87 இற்கு புறம்பாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. | இந்த மென்பொருள் தயாரிக்கும் போது முச்சக்கர வண்டி, பாடசாலை பேருந்து வண்டிகள், அலுவலக பேருந்து வண்டிகள் போன்ற யாவற்றுக்கும் உரியதாக தயாரிக்கப்பட்டதுடன் ஏனைய உபாய வழிகளை ஈடுபடுத்தி எதிர்வரும் காலங்களில் நோக்கங்களை நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுப்பதுடன் 2025 பெப்ரவரி 27 ஆந் திகதி கைச்சாத்திடப்பட்ட உடன்படிக்கை பணிப்பாளர் சபைக்கு அனுப்புவதற்கு எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும். | நிதி விதி , பெறுகைக் குழு தீர்மானத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ii) | தென் மாகாண பிரயாணிகள் போக்குவரத்து அதிகார சபையினால் தவலம பிரதேச பொறியியலாளர் அலுவலகத்திற்குத் தேவையான ஏ.பீ.சீ கலவை கனமீற்றர் 50 இணைக் கொள்வனவு செய்யும் போது ஏ.பீ.சீ கலவை கல் இருப்பின் நியமம் உறுதிப்படுத்தப்படாமல் கொள்வனவு செய்யப்பட்டதுடன் பௌதீக மாதிரி தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட பரிசோதனையின் அறிக்கையின் படி உரிய ஏ.பீ.சீ கலவை கல் குறித்துரைத்த நியமம் இன்றி இருந்தமை உறுதிப்படுத்தப்பட்டதுடன் கனமீற்றர் 23.04 நேரடியாக உரிய வீதி வேலைத் தளங்களுக்கு கொண்டு செல்லப்பட்டிருந்தமையும், பிரதேச பொறியியலாளர் அலுவலக வளவிற்கு எடுத்துச் செல்லப்பட்டிருந்த இருப்பின் மூட்டைகளின் அளவு மற்றும் பெறுமதி உறுதிப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்காது இருந்தமையும் ஆவணங்களை பேணிச் செல்லும் நிர்வாக முறைமை நலிவான மட்டத்தில் காணப்படுகின்றமையும் பதிற் கடமை புரியும் பொறியியலாளரால் உரிய பணி நடைமுறைகளுக்குப் புறம்பாக ஏ.பீ.சீ கலவை கல் இருப்பின் ஒரு பகுதி வேலைத் தளத்திற்கு ஏனைய பகுதியில் களஞ்சியப்படுத்தப்பட்டிருந்தமையும் அதன் பிரகாரம் ஏ.பீ.சீ கலவை கல் வழங்குவதற்காக செலவிடப்பட்ட ரூபா 262,500 தொகை பயனற்ற செலவினத்திற்கு உட்பட்டிருந்தமையும் அவதானிக்கப்பட்டது. | 2025 ஆம் ஆண்டு முதல் உத்தரவாதக் காலத்துடன் துணைப் பாகங்களை சரியாக இனங்கண்டு அதன் பிரகாரம் நடவடிக்கை எடுத்து துணைப் பாகங்களை கொள்வனவு செய்வதற்காக கூறுவிலை கோரி வருடாந்த உடன்படிக்கை செய்வதற்கும் வருடத்திற்கு ஒரு முறை அதனை மேற்கொள்வதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்படும். | குறித்துரைத்த நியமத்தை உடைய பொருட்கள் கொள்வனவு செய்யப்படல் வேண்டும். |
| (iii) | தென் மாகாண வீதி அபிவிருத்தி அதிகார சபைக்கு உரித்தல்லாத குடாமலான கிராமத்திற்கு செல்கின்ற வீதியை அபிவிருத்தி செய்வதற்காக ரூபா 07 மில்லியன் ஆன மதிப்பீட்டிற்காக பணிப்பாளர் சபை அங்கீகாரம் வழங்கியிருந்த போதிலும் பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் பிரகாரம் நடவடிக்கை எடுப்பதற்குப் பதிலாக பணிப்பாளர் சபை தீர்மானத்தின் மூலம் உரிய வேலைப் பகுதிகள் 02 இற்கு பகிர்ந்து அந்த வீதியின் முதலாவது கிலோ மீற்றர் ரூபா 4,234,209 தொகையில் கிராம அபிவிருத்திச் சங்கம் மற்றும் இரண்டாவது கிலோ மீற்றர் ரூபா 2,884,540 தொகையில் விவசாய சங்கத்துடன் 2024 யூலை 10 ஆந் திகதி உடன்படிக்கை செய்து உரிய ஒப்பந்தம் பூர்த்தி செய்யப்பட்ட பின்னர் முதலாவது கிலோ மீற்றருக்காக உரிய சங்கத்திற்கு ரூபா 4,206,372 உம், இரண்டாவது கிலோ | இந்த நிர்மாண வேலைகள் இரண்டையும் விரைவாக மேற்கொள்வதற்கு தேவையாக இருந்தமையால் அதிகார சபையினால் அரச நிதிச் சுற்றறிக்கை இலக்கம் 01/2021 இற்கு இணங்க இந்த 02 வேலைகளும் 02 சங்கங்களின் மூலம் நிறைவேற்றப்பட்டுள்ளது. | பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

மீற்றருக்காக உரிய விவசாய சங்கத்திற்கு ரூபா 3,019,123 உம் ஆக கூட்டுப் பெறுமதி ரூபா 7,225,495 செலுத்தப்பட்டமையால் போட்டியாளர் கூறுவிலை கோரி முழுமையான தகைமையுடன் உள்ள ஒப்பந்தகாரரை தெரிவு செய்த ஆகக் குறைந்த விலையில் ஒப்பந்தத்தை மேற்கொள்வதற்கு காணப்பட்ட சந்தர்ப்பம் நழுவ விடப்பட்டிருந்தது.

### 1.5.4.2 தென் மாகாண அபிவிருத்தி அதிகார சபை

**(அ) தீர்த்து வைக்கப்படாத கணக்காய்வுப் பந்திகள்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|
| தன் மாகாண அபிவிருத்தி அதிகார சபையின் தேயிலைக் கன்று 25 இலட்சம் வழங்குதல் தொடர்பாக அரசாங்கத்திற்கு நேரடியாக ஏற்பட்ட ரூபா 8,525,291 ஆன நட்டம் உரிய தரப்பினரிடம் இருந்து அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | மேலும் ரூபா 8,525,291 தேயிலைக் கன்றுகள் வழங்குனரிடம் இருந்து அறவிட வேண்டிக் காணப்படுகின்றது. | அறவிடும் நடவடிக்கைகளை விரைவாக பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 1.5.4.3 றுகுணு சுற்றுலாப் பணியகம்

**(அ) கணக்கீட்டுக் குறைபாடுகள்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (i) | 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிதி நிலமைக் கூற்றில் தேறிய சொத்துக்களின் கூட்டுமொத்தம் ரூபா 243,939,578 மற்றும் உரித்துக்களின் பெறுமதி ரூபா 248,563,578 ஆனமையால் தேறிய சொத்துக்கள் மற்றும் உரிமைகளுக்கு இடையே ரூபா 4,624,000 வேறுபாடு அவதானிக்கப்பட்டது. | 2025 இன் நிதிக்கூற்றுக்களில் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | சரியான பெறுமதியை உள்ளடக்கி நிதிக்கூற்றுக்கள் சரியாக தயாரிக்கப்படல் வேண்டும். |
| (ii) | பணியகத்தின் குழாம் வாகனமாக பயன் படுத்தப்படுகின்ற பஜிரோ வண்டியின் மூலதன வடிவிலான பழுதுபார்த்தலுக்கு செலவிடப்பட்ட ரூபா 1,925,690 செலவினம் ஆண்டின் செலவினமாக பதிவளிக்கப்பட்டிருந்தது. | வாகனங்களை மீள் மதிப்பீடு செய்யும் இந்த தொகையும் உரித்தாக்கி கொண்டு மீள் மதிப்பீடு மேற்கொண்டு 2025 நிதிக்கூற்றுக்கள் உள்ளடக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | சரியான பெறுமதி கணக்கீடு செய்யப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (iii) | காசுப்பாய்ச்சல் கூற்றில் ஆண்டில் காசுகளின் தேறிய மாற்றம் ரூபா 5,265,705 ஆக இருந்த போதும் 116,663,831 மறை மீதி ஒன்றாகக் காண்பிக்கப்பட்டிருந்தது. | 2025 இன் நிதிக்கூற்றுக்களில் இந்த மீதியை சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | காசுப் பாய்ச்சல் கூற்றில் பெறுமதி சரியாக குறிப்பிடப்படல் வேண்டும். |

**(ஆ) செயற்பாட்டு செயற்திறனின்மைகள்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (i) | பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சு மற்றும் றுகுணு அபிவிருத்திப் பணியகத்திற்கு இடையே 2023 ஒக்தோபர் மாதம் 23 ஆந் திகதி கைச்சாத்திடப்பட்ட புரிந்துணர்வு உடன்படிக்கையின் படி நிறைவேற்றுவதற்கு எதிர்பார்க்கப்பட்ட நோக்கங்களில் பெருந்தோட்ட பயிர்ச் செய்கை மற்றும் விவசாய ஏற்றுமதி பயிர் செய்கையை மேம்படுத்துவதாக இருந்த போதிலும் அந்த நோக்கங்களுக்கு முரணாக சுற்றுலா பூங்கா ஒன்று ஏற்படுத்தி நடாத்திச் செல்லப்பட்டிருந்தது. அவ்வாறே அந்த பூங்காவில் கடைகளை வாடகைக்கு வழங்குவதற்கு உரியதாக ஏற்புடுத்தப்பட்ட வாடகை உடன்படிக்கையின் பிரகாரம் கடை வாடகை அறவிடுவதல் தாமதம் அடைந்ததன் அடிப்படையில் மேலதிகமாக 10 சதவீத தண்டப்பணமும் பணியகத்தால் அறவிடப்பட்டிருக்கவில்லை. | 2025 சனவரி மாதம் முதல் வாடகைப் பணம் குறித்துரைத்த திகதியில் செலுத்தாது இருப்பார்களாயின் 10 வீத தண்டப் பணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | கடை வாடகை மற்றும் தண்டப் பணத்தை குறித்துரைத்த திகதியில் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ii) | பூங்காவில் நீர்த் தேக்கப் படகு சவாரி வருமானத்தில் 30 சதவீதத் தொகை றுகுணு அபிவிருத்தி பணியகத்திற்கு நாளாந்தம் செலுத்த வேண்டியிருந்ததடன் அதன் பிரகாரம் பணியகத்தால் வருமானம் சேகரிக்கப்பட்ட போதிலும் படகு சவாரிக்காக டிக்கட்களை விநியோகித்தல் தொடர்பாக உள்ளகப் பரிசோதனை ஒன்று பணியகத்தால் மேற்கொள்ளப்படாமையின் அடிப்படையில் வருமானம் படிப்படியாகக் குறைவடைந்து இருந்தது. மேலும் மக்கள் வங்கியினதும் இலங்கை வங்கியினதும் ATM இயந்திரத்திற்காக 02 கொட்டைகள் பொருத்தப்பட்டிருந்த போதிலும் உரிய வங்கியுடன் வாடகை உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டு உரிய வருமாத்தை சேகரிப்பதற்கு பணியகத்தால் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. நிர்மாணிக்கப்பட்ட தற்காலிகக் கட்டிடத்தின் வியாபாரங்களுக்காக | வாடகைப் பணம் தீர்மானத்திற்காக கூறு விலை விலைக் குழு நியமிக்கப்பட்டுள்ளது. | வருமானம் உழைக்கப்படுகின்ற ஒவ்வொரு துறைகளிலும் முறையாக பிரகாரம் வருமானத்தை சேகரிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | 25 கூறுகளில் நாளாந்தம் வருமானம் சேகரிக்கும் அடிப்படையில் வியாபாரிகளுக்கு வழங்குப்பட்டிருந்த போதும் மழை நாட்களில் நாளாந்த வருமானம் அறவிடல் இன்றி சந்தர்ப்பங்களும் காணப்பட்டது. | | |
| (iii) | றுகுணு சுற்றுலாப் பணியகத்திற்கு உரிய அம்பலாங்கொட வசதிகள் வழங்கும் சேவை நிலையம் 2023 ஆம் ஆண்டு முதல் 02 வருட காலத்திற்காக மாதம் ஒன்றுக்கு ரூபா 48,000 வீதம் வாடகை அடிப்படையில் வழங்கப்பட்டதுடன் வாடகையாளரால் அந்த ஆண்டில் இருந்து 05 வருட காலத்திற்காக ரூபா 50,000 வீதம் ஆன மாதாந்த வாடகை தொகையில் உப வாடகைக்கு வழங்கப்பட்டிருந்தது. பணியகத்தால் வாடகையாளருடன் உடன்படிக்கை செய்கின்ற சந்தர்ப்பத்தின் போது உப வாடகைக்கு வழங்கல் தொடர்பான நிபந்தனை விதிக்கப்படாது இருந்தமையால் உபவாடகையாளரால் வாடகைப் பணம் செலுத்துதல் புறக்கணிக்கப்பட்டமையால் மீளாய்வாண்டின் இறுதியில் வாடகைப் பணமாக ரூபா 576,000 தொகையும், நீர் மற்றும் மின்சாரப் பட்டியலுக்காக ரூபா 262,862 தொகையும் அறவிட வேண்டி இருந்தது. | அறவிட வேண்டிய நிலுவை வாடகைப் பணம் மற்றும் நீர், மின்சாரப் பட்டியல் கட்டணத்தை அறவிடுவதற்காக தேவையான சட்ட ரீதியான நடவடிக்கைககளை எடுப்பதற்கான ஆரம்ப நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளது. | உரிய பிரகாரம் சகல விடயங்களையும் உள்ளடக்கி வாடகை உடன்படிக்கை செய்ய வேண்டியிருந்ததுடன் அறவிட வேண்டிய வாடகைப் பணம் குறித்துரைத்த திகதியில் அறவிடப்படல் வேண்டும். |
| (iv) | றுகுணு சுற்றுலா பணியகத்திற்கு உரிய மதுராகல உனுதிய உற்பத்தி வளவில் நிர்மாணிக்கப்பட்ட 24 கடைகளின் வாடகை உடன்படிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்காமையினால் மீளாய்வாண்டின் இறுதி வரையில் ரூபா 294,000 வாடகைத் தொகையை அறவிட வேண்டி இருந்தது. மேலும் பெல்கொட 10 இற்கான வாடகை உடன்படிக்கை கால எல்லை முடிவடைந்த பின்னர் புதிய வாடகை உடன்படிக்கை கைச்சாத்திடுவதற்கு நடவடிக்கை எடுக்காமல் பழைய வாடகை உடன்படிக்கையில் குறிப்பிடப்பட்ட தொகையே அறவிடப்படுவதுடன் ஒரு வலைக் கடை இருந்து ரூபா 31,000 மற்றும் 02 வலைக் கடையில் இருந்து 2023 மற்றும் 2024 ஆம் ஆண்டுகளின் போது எந்த வாடகைத் தொகையும், அக்குரள பொது சுகாதார நிலையத்தில் 2023 சனவரி மாதம் முதல் வாடகைக்கு வழங்கப்படாமையினால் ரூபா 307,800 வருமானமும் அறவிடப்பட்டிருக்க வில்லை. | இந்த கடைகள் 2025 இன் அபிவிருத்தித் திட்டத்தின் நிதியேற்பாடுகளின் மூலம் எதிர்காலத்தில் நிரந்தரமாகத் தயாரிக்கப்பட்ட பின்னர் குறித்துரைத்த கேள்வி நடைமுறையின் பிரகாரம் வியாபாரக் கடைகளை வாடகைக்கு வழங்குவதற்கும் நிலுவைப் பணத்தை அறவிடுவதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும். | நிலுவை வாடகைப் பணத்தை அறவிடுவதற்கும், வாடகை உடன்படிக்கையில் கைச்சாத்திடுவதற்கும் நடவடிக்கை எடுத்து வருமானத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| (v) றுகுணு சுற்றுலா பணியகத்திற்கு உரிய பான்சாலை மற்றும் தற்காலிக கொட்டகை தற்காலிக தாங்கியில் இருந்து 2024 ஆம் ஆண்டின் போது எந்த ஒரு வாடகை வருமானமும் கிடைக்காது இருந்ததுடன் எளிமை உள்ள நபருக்கு வாடகைக்கு வழங்குவதற்கேனும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. மோட்டார் வாகன தரிப்பிடத்தில் காணப்படுகின்ற சிற்றுண்டிச் சாலை, மதுனாகல உணுதிய உற்பத்தி வளவில் காணப்பட்ட நிழற்பட பிரதி எடுக்கும் நிலையம் மற்றும் அந்த வளவிற்குரிய 05 ஏக்கர் 01 றூட் 13 பேர் அளவினை உடைய வயற் காணியின் வாடகை உடன்படிக்கையின் காலம் முடிவடைந்து இருந்த போதிலும் வாடகை உடன்படிக்கையை புதுப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்காமையின் காரணமாக பணியகத்திற்கு அறவிட வேண்டிய வருமானம் இழக்கப்பட்டிருந்தது. | எதிர் காலத்தில் கொள்வனவாளர்களுடன் உடன்படிக்கை செய்து உரிய வாடகைப் பணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | வாடகை உடன்படிக்கையை நாளது வரையாக்கி வாடகைப் பணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**(இ) விளைவற்ற மற்றும் குறைவாகப் பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|
| றுகுணு சுற்றுலா பணியகத்திற்கு உரிய மதுனாகல உனுதிய உற்பத்தி வளவில் காணப்பட்ட சுற்றுலா விடுதியில் 2006 ஆம் ஆண்டளவில் நிர்மாணிக்கப்பட்டிருந்த போதிலும் அண்மைக் காலத்தில் கவனத்தில் கொள்ளக் கூடிய பழுது பார்த்தல்கள் மேற்கொள்ளப்படாமையினால் கணக்காய்வு சந்தர்ப்பம் வரையிலும் சுற்றுலாப் பிரயாணிகளுக்காக தங்குமிட வசதிகளை வழங்க முடியாத நிலைமைக்கு உட்பட்டு இருந்தது. | மதுனாகல உனுதிய உற்பத்தி வளவில் காணப்படுகின்ற சுற்றுலா விடுதியைப் பழுது பார்ப்பதற்காக 2025 இன் அபிவிருத்தி திட்டத்தில் நிதியேற்பாடுகள் ஒதுக்கப்பட்டுள்ளது. | குறித்துரைத்த காலத்தில் பழுது பார்த்தல்களை மேற்கொண்டு உச்ச அளவில் வினைத்திறன் ஒன்றைப் பெற்றுக் கொள்ளும் வகையில் பயன்படுத்துதல் வேண்டும். |

**1.5.5 தலைப்பு 305 – தென் மாகாண சுகாதார சேவைகள் திணைக்களம்**

**(அ) முகாமைத்துவ செயற்திறனின்மைகள்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|
| (i) நாகொட பிரதேச வைத்திய சாலையில் கணிஸ்ட பதவியணியினர் மற்றும் நோயாளிகளுக்கு உணவு வழங்குவதற்காக தெரிவு செய்யப்பட்டிருந்த வழங்குனரால் பச்சை உணவுப் பொருட்கள் அந்த வைத்திய | உணவுப் பட்டோலையின் பிரகாரம் நோயாளர்களுக்கும் வைத்தியசாலைப் பதவியணியினருக்கும் உணவு வழங்கப்பட்டிருந்ததா என்பது தொடர்பாக நிறுவனப் | முறையான மேற்பார்வையின் கீழ் உரிய பணிகள் நிறைவேற்றப்பட வேண்டி உள்ளதுடன் உணவுகளின் தரத் |

| | | |
|---|---|---|
| சாலையில் சமையற்காரரின் வீட்டுக்கு முறையற்ற வகையில் வழங்கப்பட்டிருந்ததுடன் சமையற்காரரால் வைத்தியசாலைக்கு நாளாந்தம் தேவைப்படுகின்ற பச்சை உணவு அளவு மாத்திரம் அவரின் வீட்டில் இருந்து எடுத்துச் செல்லப்பட்டு உணவு தயாரிக்கப்படுகின்றமையும் கணக்காய்வில் அவதானிக்கப்பட்டது. வழங்குனரால் வழங்கப்படுகின்ற பச்சை உணவு மற்றும் நாளாந்த உணவு பட்டோலையின் பிரகாரம் அந்த உணவு நோயாளர்களுக்கும் ஊழியர்களுக்கும் வழங்கப்படுகின்றமைக்கான போதியளவான மேற்பார்வை மற்றும் உணவுகளின் தரத் தன்மையை பரீட்சிக்காது இருந்தமையும் அதனால் 2024 ஆம் ஆண்டின் சனவரி முதல் ஆகஸ்ட் மாதம் வரை பச்சை உணவுகளுக்காக செலுத்தப்பட்ட ரூபா 1,948,775 தொகை பயனுள்ளதாக செலவிடப்பட்டிருந்ததா என கணக்காய்வின் போது ஏற்றுக் கொள்ளக் கூடிய உறுதிப்படுத்தல்கள் காணப்படவில்லை. | பொறுப்பு மருத்துவ உத்தியோகத்தரினால் திடீர் பரிசோதனைகள் மேற்கொள்ளப்படுகின்றது. | தன்மையை பரீட்சித்தல் நாளாந்தம் மேற்கொள்வதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**(ஆ) சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|
| மாத்தறை மாவட்ட சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்தில் சேவையாற்றுகின்ற உத்தியோகத்தருக்கு 2023 சனவரி 22 ஆந் திகதி முதல் 2023 பெப்ரவரி 19 ஆம் திகதி வரை அங்கீகாரம் இன்றி வெளிநாடு சென்றிருந்ததுடன் அந்த காலத்தில் வைத்தியசாலையில் இருந்ததாகக் காண்பித்து தெய்யந்தர பிரதேச வைத்தியசாலையில் நிறுவன பொறுப்பு மருத்துவ உத்தியோகத்தரால் 10 நாட்களுக்காவும், நிரவல்பிட்ட பிரதேச வைத்தியசாலையின் நிறுவனப் பொறுப்பு மருத்துவ உத்தியோகத்தர் 17 நாட்களுக்காவும் மருத்துவ அறிக்கை விநியோகிக்கப்பட்டிருந்தது. விடுமுறை அங்கீகரித்துக் கொள்வதற்காக நியமிக்கப்பட்ட மருத்துவப் பரிசோதனை சபையின் அறிக்கையின் பிரகாரம் 2023 பெப்ரவரி 01 முதல் 2023 பெப்ரவரி 27 ஆந் திகதிய வரை இந்த உத்தியோகத்தரின் சமயோசித விடுமுறை நாட்கள் 27 அங்கீகரிக்கப்பட்டிருந்தது. அந்த | இந்த செயற்பாடுகள் தொடர்பாக ஆரம்ப விசாரணைகள் நடாத்துவதற்காக பிரதம அமைச்சு செயலாளரினால் ஆரம்ப விசாரணைக் குழு ஒன்று நியமிக்கப்பட்டுள்ளதுடன் அந்த குழுவின் பரிந்துரையின் பிரகாரம் எதிர்காலத்தில் ஒழுக்காற்று நடவடிக்கைகள் எடுக்கப்படும். | தாபன விதிக் கோவையின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| உத்தியோகத்தரின் கோரிக்கையின் அடிப்படையில் ஓய்வு பெற்றுச் செல்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்த போதிலும் 2023 பெப்ரவரி 27 ஆந் திகதி மீண்டும் சேவைக்கு அறிக்கையிட்டு ஓய்வூதியம் பெற்றுச் செல்லும் கோரிக்கையை அகற்றப்பட்டிருந்ததாக 2023 ஏப்ரல் 19 ஆம் திகதி கடிதம் அறிவிக்கப்பட்டதுடன் 2023 பெப்ரவரி 27 ஆந் திகதி முதல் 2023 யூன் 30 ஆம் திகதி வரையான காலத்திற்காக உத்தியோகத்தருக்கு ரூபா 93,675 சம்பளம் ஆகவும் செலுத்தப்பட்டிருந்தது. மேலும் உரிய உத்தியோகத்தர் மற்றும் மருத்துவ உத்தியோகத்தருக்கும், பிழையான மருத்துவ அறிக்கை விநியோகிக்கப்பட்ட பொறுப்பு வாய்ந்த உத்தியோகத்தர்கள் தொடர்பாக தாபன விதிக் கோவையின் XLVIII அத்தியாயத்தின் 31.1.12 பிரிவின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | | |

**(இ) விளைவற்ற மற்றும் குறைவாகப் பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|
| ஆரம்ப சுகாதார சேவையினை கட்டியெழுப்பும் செயற்திட்டத்திற்கு இணையாக தென் மாகாண வைத்தியசாலைகளில் கணனி வலையமைப்பை மேற்கொள்ளும் செயற்திட்டத்தின் கீழ் நாகொட பிரதேச வைத்தியசாலைக்காகவும் ரூபா 299,117 தொகை செலவிடப்பட்டதுடன் அந்த நிகழ்ச்சித் திட்டத்திற்காக வைத்தியசாலைக்கு 2021 மற்றும் 2023 ஆம் ஆண்டுகளிலும் Barcode Reader, Scanner மற்றும் Printer 03 வழங்கப்பட்டிருந்த போதிலும் ஏனைய தேவைகள் பூர்த்தி செய்யாமையின் அடிப்படையில் அந்த உபகரணங்கள் இதுவரையிலும் விளைவற்றுக் காணப்பட்டது. | இந்த அலுவலகத்தில் மற்றும் காலி மாவட்ட சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்திலும் சுகாதார தகவல் பிரிவில் காணப்பட்ட பிரச்சனைகள் தற்போது தீர்த்து வைத்து விளைவற்றதாகக் காணப்பட்ட உபகரணங்களை பயன்படுத்துவதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | சொத்துக்களை ஆக்கபூர்வமாக ஈடுபடுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**1.5.6 தலைப்பு 306 – தென் மாகாண மற்றும் உள்ளூராட்சி திணைக்களம்**

**(அ) சட்டடங்கள் விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை**

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|---|
| (i) | 1987 இன் 15 ஆம் பிரதேச சபைகள் | மிகைக் கட்டணம் தொடர்பாக கணக்காய்வாளர் தலைமை | 03 மிகைக் கட்டணங்களுக்கு | பிரதேச சபைகள் |

| | | | | |
|---|---|---|---|---|
| | சட்டத்தின் 172(8) , (9) ஆம் பிரிவுகள் | அதிபதியின் தீர்மானம் அறிவிக்கப்பட்ட திகதியில் இருந்தே 14 நாட்களுக்குள் முறைப்பாட்டாளரால் உள்ளூராட்சி ஆணையாளருக்கு உரிய பணம் செலுத்தப்படல் வேண்டும். அவ்வாறு பணம் செலுத்தாதிருக்குமாயின் மற்றும் முறைப்பாடுகள் இன்றி இருக்குமாயின் உரிய நபர் குடியிருக்கின்ற பிரதேசத்தில் நீதி மன்ற அதிகாரம் உள்ள மாவட்ட நீதிமன்றத்திற்கு கோரிக்கை சமர்ப்பித்து உரிய பணத்தை அறவிடுவதற்கு உள்ளூராட்சி ஆணையாளரால் நடவடிக்கை எடுக்க வேண்டியிருந்த போதிலும் கணக்காய்வாளர் தலைமை அதிபதியால் பல்வேறு சந்தர்ப்பங்களின் போது விநியோகிக்கப்பட்ட ரூபா 7,507,556 ஆன 10 மிகைக் கட்டண சான்றிதழ் தொடர்பாக மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் அந்த நியதிகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. | உரியதாக தற்போது வழக்கு நடவடிக்கைகள் அமுல்படுத்தப்படுவதுடன் ஒரு மிகைக் கட்டணம் தொடர்பாக தீர்மானம் எடுத்த போதும் உரிய முறைப்பாட்டாளரை விடுவிக்கப்பட்டுள்ளதுடன் 06 மிகைக் கட்டணங்களுக்காக மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் தீர்மானம் இதுவரையிலும் கிடைத்திருக்கவில்லை. | சட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ii) | அரச நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு செயலாளரின் இலக்கம் PL/09/01/06/Digitalization – Project மற்றும் 2023 திசெம்பர் 13 ஆந் திகதிய ஆலோசனைக் கடிதம் | தொடர்புடைய ஆலோசனைக் கடிதத்தின் பிரகாரம் மீளாய்வாண்டின் இறுதி வரையில் தென் மாகாணத்தின் 34 உள்ளூராட்சி நிறுவனங்களினால் இணையவழி ஊடாக செலுத்தும் வசதிகள் வழங்கப்படாது இருந்ததுடன் அம்பாந்தோட்டை மாவட்ட உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகத்தால் மேற்பார்வை செய்யப்படுகின்ற 05 உள்ளூராட்சி நிறுவனங்களால் கூட்டுமொத்தமாக ரூபா 2,507,500 செலவில் ஸ்தாபிக்கப்பட்டிருந்த மென்பொருள் முறைமையின் மூலமும் மீளாய்வாண்டின் | சகல உள்ளூராட்சி நிறுவன தலைவரினாலும் இந்த மென்பொருளை ஸ்தாபிப்பதற்கு இணக்கம் தெரிவிக்கப்பட்டுள்ளது. | ஆலோசனைக் கடிதத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | இறுதி வரையிலும் இணையவழி ஊடான செலுத்துதல் வசதிகள் வழங்கப்பட்டிருக்க வில்லை. | | |
| (iii) | 2023 ஆகஸ்ட் 10 ஆந் திகதிய இலக்கம் 01/11/roadapp என்ற தென் மாகாண மற்றும் உள்ளூராட்சி ஆணையாளரின் ஆலோசனைக் கடிதம் | தொடர்புடைய ஆலோசனைக் கடிதத்திற்கு முரணாக மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் தென் மாகாணத்தில் உள்ளூராட்சி நிறுவனங்கள் 49 இற்கு உரிய கிராம உத்தியோகத்தர் பிரிவுகள் 2,125 இல் 436 பிரிவுகளுக்கு உரிய வீதிகள் அளவிட்டு வீதிப் பதிவேடு தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | உள்ளூராட்சி நிறுவனங்களுக்கு அதிக அளவில் அளவிடல் நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்பட்டு இறதிக் கட்டத்தில் காணப்படுவதுடன் தற்போதய செயல் முன்னேற்றத்தை அவதானித்தல் தொடர்ச்சியாக செய்யப்படுகின்றது. | ஆலோசனைக் கடிதத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**(ஆ) முகாமைத்துவ செயற்திறனின்மைகள்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|
| 2023 இன் நிதி அதிகாரக் கையளிப்பின் பிரகாரம் உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகத்தின் பெறுகைக் குழு எல்லை ரூபா 500,000 ஆக இருந்ததுடன் ரூபா 2,085,510 பெறுமதி உடைய டொயாட்டா Hilux இரட்டை பயன்பாட்டு வாகனத்தை பழுது பார்ப்பதற்காக திணைக்களப் பெறுகைக் குழுவினதும், தொழில் மதிப்பீட்டுக் குழுவினதும் பரிந்துரைகளைப் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்காமல் இயந்திரப் பொறியியலாளரின் பரிந்துரை மாத்திரம் கவனத்தில் கொண்டு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 2.4 ஆம் பிரிவிற்கு முரணாக நடவடிக்கை ஏடுக்கப்பட்டதுடன் மதிப்பீடு மற்றும் தெரிவு பணி நடைமுறைகள் வெளிப்படையாக மற்றும் சரியாக உறுதிப்படுத்தலின் அடிப்படையில் பெறுகையின் நோக்கங்கள் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை. | இதற்காக 04 நிறுவனங்களில் இருந்த சமர்ப்பிக்கப்பட்ட கூறுவிலைகள் காலி உதவி ஆணையாளர் அலுவலகத்தின் பெறுகைக் குழுவிற்கு சமர்ப்பித்து உள்ளூராட்சித் திணைக்களத்தின் இயந்திரப் பொறியியலாளருக்கு அனுப்பி பரிந்துரை பெற்றுக் கொள்ளப்பட்ட பின்னர் தெரிவு செய்யப்பட்ட நிறுவனத்திற்கு ஒப்பந்தம் கையளித்தல் முறையான பிரகாரம் கையளித்து முறையான பிரகாரம் உடன்படிக்கை செய்து இந்த பணிகள் வெற்றிகரமாக நிறைவேற்றிக் கொள்ளப்பட்டதுடன் பெறுகைத் தீர்மானம் குறிப்பிடப்படாமை அலுவலகத்தின் தவறினால் ஆகும். | பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**(இ) சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|
| 2021 ஆம் ஆண்டு முதல் 2024 ஆம் ஆண்டு வரையான காலத்திற்கு உரியதாக சேகரிக்கப்பட்ட ரூபா 693,381,608 ஆன முத்திரைக் கட்டண வருமானத்திற்கு உரிய தகவல்கள் பட்டோலைகளுக்காக தரகு பணமாக முத்திரைக் கட்டண வருமானத்தில் 03 சதவீதத்திற்கு சமமான தொகை ஒன்று அதாவது கூட்டுமொத்தமாக ரூபா 21,217,468 உள்ளூராட்சி நிறுவனங்களில் அந்த பணிகளுடன் தொடர்புடைய பதவியணிகளில் 129 உத்தியோகத்தர்களுக்கு சபை நிதியத்தில் இருந்து செலுத்தப்பட்டிருந்தது. | | |
| (i) மாநகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் (252 ஆவது அதிகாரம்) 185 (ஈ), நகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் (255ஆவது அதிகாரம்) 158 (ஈ) மற்றும் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 129(ஆ) பிரிவுகளின் பிரகாரம் 1982 இன் 43 ஆம் இலக்க முத்திரைக் கட்டண சட்டத்தின் கீழ் செலுத்தப்படுகின்ற முத்திரைக் கட்டண வருமானம் தென் மாகாண சபை நிதியத்திற்கு செலவு வைக்கப்பட்டிருக்கும் போது முத்திரைக் கட்டணங்களுக்கு உரிய தகவல்கள் பட்டோலைகளில் இடுவதற்காக உரிய உத்தியோகத்தர்களுக்கு இணைந்த படிகள், மேலதிக நேரப் படிகளைச் செலுத்துவதற்கு முடியுமாக இருக்கும் போது தென் மாகாண ஆளநரின் அங்கீகாரத்தின் அடிப்படையில் மாத்திரம் தரகுப் பணம் செலுத்தப்பட்டிருந்தது. | 2021 சனவரி 01 ஆந் திகதி இலக்கம் 4/04/01/2021 என்ற சுற்றறிக்கை தென் மாகாண உள்ளூராட்சித் திணைக்களத்தால் உரிய அதிகாரத்துடன் வழங்கப்பட்ட சட்ட ரீதியான அதிகாரத்தின் பிரகாரம் சுற்றறிக்கையான இருந்தமை மற்றும் அதன் சகல பிரிவுகளிலும் சட்ட ரீதியான அடிப்படையை கொண்டுள்ளது. | உரிய சட்ட ரீதியான அடிப்படையில் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ii) 1984 நவம்பர் 20 ஆம் திகதிய உள்ளூராட்சி அமைச்சின் உதவி செயலாளரின் இலக்கம் 1984/19 என்ற சுற்றறிக்கையின் ஏற்பாடுகளை விஞ்சி தென் மாகாண ஆளுநரின் அங்கீகாரத்தின் அடிப்படையில் 2021 சனவரி 01 ஆம் திகதிய இலக்கம் 4/04/01/2021 என்ற உள்ளூராட்சி ஆணையாளரால் விநியோகிக்கப்பட்ட உள்ளக சுற்றறிக்கை மூலம் ஏற்பாடுகள் வழங்கப்பட்டமையால் தென் | மேற்படி | உரிய சட்ட ரீதியான அடிப்படையில் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

மாகாணத்தின் உள்ளூராட்சி நிறுவனங்களின் வருமான பரிசோதகர்களை உள்ளடக்கிய சபையின் உத்தியோகத்தர்களுக்கு 119 சந்தர்ப்பங்களின் போது அலுவலக நேரத்தில் ஏனைய சேவை நிலையங்களுக்கு சென்று தகவல்களை பட்டியல் இடுவதற்காக மாதாந்தம் ஒன்றிணைந்த சம்பளத்தை விஞ்சி மாதம் ஒன்றுக்கு ரூபா 50,000 தொகை ஆக ரூபா 2,318,326 இற்கு இடையில் தரகுப் பணம் ஒரு உத்தியோகத்தருக்கு செலுத்தப்பட்டிருந்தது.

**(ஈ) சொத்துக்கள் முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|
| அம்பாந்தோட்டை உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம் நடாத்திச் செல்லப்படுகின்ற சதுர மீற்றர் 2,795 பரப்பளவை உடைய கட்டிடம் தற்போது உடைந்து செல்வதற்கான ஆபத்துக்கு உட்பட்டு இருந்ததுடன் கட்டிடத்தில் ஒரு பகுதி மாத்திரம் நிறுவனத்தின் ஆவணக் கூடமாக பயன்படுத்தப்படுகின்றது. இந்த கட்டிடம் உரிய பழுது பார்த்தல் மேற்கொண்டு ஆக்கபூர்வமான பணிகளுக்கு ஈடுபடுத்த முடியுமா என்பது தொடர்பாக அம்பாந்தோட்டை மாநகர சபைக்குரிய நிலத்தில் இந்த அலுவலகத்தின் ஆவண கூடத்தில் ஒரு பகுதியை நடாத்திச் செல்லப்படுவதுடன் 2024 பெப்ரவரி 27 ஆம் திகதி முதல் 2024 நவம்பர் வரை கூட்டுமொத்தமாக ரூபா 371,530 நில வாடகையாக செலுத்தப்பட்டிருந்தது. | பழைய கட்டிடம் 10 km தூரத்தில் அமைக்கப்பட்டமையால் அதற்காக போக்குவரத்து செலவினமும் கனிசமான அளவில் செலவிட வேண்டி ஏற்பட்டமை அவசர சந்தர்ப்பங்களின் போது ஆவணங்களை கண்டறிந்து செல்ல வேண்டி ஏற்பட்டதன் காரணமாக 2024 ஆம் ஆண்டு முதல் புதிய ஆவண கூடத்தை நடாத்திச் செல்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. | ஆக்க பூர்வமான பணிகளுக்கு ஈடுபடுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 1.5.7 தலைப்பு 308 – தென் மாகாண கல்வி, காணி மற்றும் காணி அபிவிருத்தி, பெருந்தெருக்கள் மற்றும் தகவல் அமைச்சு

**(அ) சட்டடங்கள் விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை**

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (i) கல்வி அமைச்சு சுற்றறிக்கை | | | |
| • 2023 திசெம்பர் 29 தொடர்புடைய | ஏற்பாடுகளின் இந்த நிகழ்ச்சித் திட்டம் சுற்றறிக்கை | | |

| | | | |
|---|---|---|---|
| ஆம் திகதிய இலக்கம் 54/2023 என்ற பாடசாலையில் அடிப்படையிலான தரம் பொருண்மையான மற்றும் கட்டமைக்கப்பட்ட அபிவிருத்திக்காக திட்டமிடல் மற்றும் பெறுகைகள் தொடர்பான சுற்றறிக்கை மற்றும் வழிகாட்டிக் கைநூலின் 11.1 ஆம் பிரிவு | பிரகாரம் 1,000 மாணவர்களுக்கு மேற்பட்ட பாடசாலை ஒன்றில் பொருட்கள் மற்றும் சேவைகளை கொள்வனவு செய்வதற்காக பாடசாலை பெறுகைக் குழு ரூபா ஒரு மில்லியன் வரை மாத்திரம் அங்கீகரிக்கும் இயலுமை காணப்பட்ட போதும் காலி மாவட்டத்தில் பாடசாலையில் 2024 ஆம் ஆண்டின் போது பாடசாலை மாணவர்களுக்காக 2,000 ரீசேட் கொள்வனவு செய்வதற்கான ரூபா 2,850,000 பாடசாலை பெறுகைக் குழுவின் அங்கீகாரத்தில் மாத்திரம் செலவிடப்பட்டிருந்தது. | வருடாந்த திட்டத்தில் உள்ளடக்கப்பட்டமையால் பெறுகைக் குழு அங்கீகாரத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்ட தாகவும் அவ்வாறே அமைச்சின் செயலாளரின் அங்கீகாரம் இன்றி மேற்கொள்ளப்பட்ட தவறை இதன் பின்னர் அவ்வாறு மேற்கொள்ளாது இருப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| • 2023 திசெம்பர் 29 ஆம் திகதிய இலக்கம் 54/2023 என்ற சுற்றறிக்கையின் 4.1.3.2 , 7.1(ஈ) குறிப்பு (iii) மற்றும் 7.2 ஆம் பிரிவு | தொடர்புடைய சுற்றறிக்கையின் ஏற்பாடுகளுக்கு முரணாக ஒரு பாடசாலையில் 2024 ஆம் ஆண்டின் போது முதலாவது தரத்திற்கு உள்ளடக்கப்பட்ட மாணவர்களிடம் இருந்தும், 06 தரத்திற்கும் உயர் தரத்திற்காகவும் சேர்க்கப்பட்ட மாணவர்களின் பாடசாலை அபிவிருத்திச் சங்க கட்டணமாக ஒரு மாணவரிடம் இருந்து ரூபா 2,000 தொகையும், விசேட நன்கொடையாக உருவமானவரிடம் இருந்து முறையே ரூபா 5,000 தொகை, ரூபா 7,000 மற்றும் ரூபா 10,000 போன்றவையாக கூட்டுமொத்தமாக ரூபா 3,547,000 தொகையும் அறவிடப்பட்டிருந்தது. மேலும் மகளிர் பாடசாலை ஒன்றில் 2,896,630 தொகை பாடசாலை மாணவர்களிடம் இருந்து அறவிட்டு பாடசாலை அபிவிருத்திச் சங்க கணக்கில் செலவு வைக்கப்பட்டிருந்தது. | சுற்றறிக்கைக்கு முரணாக பணம் அறவிடப்பட்டமை மற்றும் எதிர்காலத்தில் சுற்றறிக்கைக்கு பிரகாரம் நடவடிக்கை எடுப்பதாக ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**(ஆ) முகாமைத்துவ செயற்திறனின்மைகள்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (i) | துறை சார்ந்த உத்தியோகத்தர்களால் நிறைவேற்றப்பட்ட பணிகளை மேற்பார்வை செய்வதற்காக தென் மாகாணக் கல்வி செயலாளரால் மீளாய்வாண்டில் வேலை செய்ய வேண்டிய 242 நாட்களில் 145 நாட்கள் கடமைப் பிரயாணத்திற்காக கூட்டிணைந்த படியாக ரூபா 145,000 உம், வாரா இறுதி நாட்கள் மற்றும் அரசாங்க விடுமுறை தினங்களில் பிரயாணத்திற்காக 87 நாட்களுக்காக ரூபா 86,500 தொகையும் செலுத்தப்பட்டமையால் அந்த செயலாளர் அமைச்சில் நடவடிக்கை எடுக்க வேண்டிய நிர்வாக நடவடிக்கைகளுக்காக போதியளவான காலம் எடுக்காது இருந்தமை அவதானிக்கப்பட்டது. | செயலாளரால் பாடசாலை மற்றும் ஏனைய கல்வி முறைமைகளில் ஈடுபட்டிருந்து நிர்மாண செயற்திட்டங்களின் செயல் முன்னேற்றத்தை மேற்பார்வை செய்தல், வலய அலுவலகம் மற்றும் பாடசாலை மேற்பார்வை போன்ற கடமைகளை நிறைவேற்றுவதற்காக வார நாட்களிலும் மற்றும் வார இறுதி மற்றும் விடுமுறை தினப்படிகள் வழங்கப்பட்டுள்ளது. | நிர்வாக நடவடிக்கைகளுக்காக தேவையான காலத்தைப் பெற்றுக் கொள்ளும் வகையில் மேற்பார்வை நடவடிக்கைகளுக்குத் தேவையான நாட்களின் எண்ணிக்கை மாத்திரம் ஈடுபடுத்ததுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ii) | அம்பாந்தோட்டை வலயக் கல்வி அலுவலகத்திற்குரிய பாடசாலை தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட ஆரம்ப விசாரணையில் ஒழுக்காற்று நடவடிக்கைகளுக்கு உட்பட்ட வயது 59 வருடத்தை உடைய ஆசிரியரின் கோரிக்கையின் பிரகாரம் 90 நாட்களுக்காக ஓய்வூதிய முன் விடுமுறை அங்கீகரிக்கப்பட்டிருந்த போதிலும் அந்த ஆசிரியர் ஓய்வு பெறல் முன் விடுமுறையாக 110 நாட்கள் பெற்ற பின்னர் ஓய்வூதியம் முன் விடுமுறை இரத்துச் செய்து மீண்டும் சேவைக்கு அழைக்கப்பட்டிருந்தார். தாபன விதிக் கோவையின் II ஆம் தொகுதியின் XLVIII அத்தியாயத்தின் 36.2 ஆம் பிரிவின் பிரகாரம் அந்த உத்தியோகத்தரின் கோரிக்கை தொடர்பாக ஓய்வூதிய பிரமாணக் குறிப்பின் 12 ஆம் பிரிவின் பிரகாரம் மீண்டும் சேவைக்கு கோரப்பட்டிருந்தார். ஓய்வூதிய முன் விடுமுறை காலத்தில் பெறப்பட்ட விடுமுறைகளுக்காக ஈடு செய்யக் கூடிய விடுமுறைகள் மற்றும் ஈடு செய்வதற்கு முடியாத விடுமுறை நாட்கள் 47 இற்காக சம்பளமற்ற விடுமுறையாக ரூபா 158,332 தொகை அறவிடப்பட்டிருந்த போதிலும் ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | வயது 60 வருடங்களாகும் வரை தொடர்ந்தும் சேவையில் ஈடுபடுவதற்கான சந்தர்ப்பம் வழங்குமாறு கோரி கடிதம் ஒன்று சமர்ப்பிக்கப்பட்டமையால் ஓய்வூதிய விடுமுறை இரத்துச் செய்யப்பட்டு மீண்டும் சேவைக்கு அழைப்பதற்கு அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. | ஓய்வூதிய பிரமாணக் கோவையின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| (iii) பொதுக் கல்வி நவீன மயப்படுத்தும் செயற்திட்டத்திற்காக மீளாய்வாண்டின் போது ரூபா 454.44 மில்லியன் செலவிடப்பட்டுள்ளதுடன் அதில் புதிய நிர்மாணங்கள் மற்றும் பராமரிப்பு மற்றும் நவீன மயப்படுத்தும் கூறுகள் இரண்டிற்காக ஒதுக்கப்பட்ட ரூபா 248.645 மில்லியன் ஆன நிதி ஏற்பாட்டில் செலவிடப்பட்ட உள்ளபடியான செலவினம் ரூபா 175.07 மில்லியன் ஆகும். அதில் ஒட்டுமொத்த செலவினத்திலும் 39 சதவீதம் ஆக இருந்ததுடன் அந்த செலவினம் செயற்திட்டத்தின் நோக்கத்தை அடைந்து கொள்வதற்காக நேரடியாக உரித்தல்லாத பாடசாலை நிர்மாணம், பழுது பார்த்தல் மற்றும் நவீன மயப்படுத்தல் நடவடிக்கைகளுக்காக செலவிடப்பட்டிருந்தது. | பாடசாலைகளின் தேவையினை இனங்கண்டு செயற்திட்டத்திற்கு தேவையான திட்டங்களை தயாரித்து பிரதம செயலாளர் ஊடாக அரச நிர்வாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் மூலம் உலக வங்கியின் இணக்கப்பாட்டின் அடிப்படையில் அதனை அங்கீகரித்து பாடசாலைகளின் செயற்திட்டம் அமுல்படுத்தப்பட்டிருந்தது. | பொதுக் கல்வி நவீன மயப்படுத்தும் செயற்திட்டத்திற்குரிய நிதி ஏற்பாடுகள் ஒதுக்க வேண்டிய செயற்திட்ட கூறுகளில் குறிப்படுகின்ற ஆலோசனைக் கோவையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்து செயற்திட்டத்தின் நோக்கங்களை அடைந்து கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (iv) தென் மாகாண கல்வி, காணி மற்றும் காணி அபிவிருத்தி, பெருந்தெருக்கள் மற்றும் தகவல் அமைச்சினால் மீளாய்வாண்டின் போது இலங்கை ஆசிரியர் சேவையின் (3) ஆம் வகுப்பின் 1 (அ) தரத்தின் பட்டதாரி ஆசிரியர்கள் சேர்க்கும் போது | | |
| • இலங்கை ஆசிரியர் சேவைப் பிரமாணக் குறிப்பின் 7.2.3.4 ஆம் பிரிவின் பிரகாரம் பாடசாலைகளை அடிப்படையாகக் கொண்ட ஆட்சேர்த்தல்கள் மேற்கொள்ளாமை பிரதேச செயலக மட்டத்தில் ஆட்சேர்ப்புக்கள் மேற்கொள்ளப்பட்டதன் காரணமாக பரீட்சைக்கு உட்படுத்தப்பட்ட 04 பாடங்களில் ஆகக் கூடிய புள்ளிகளைப் பெற்ற தகமைகளைப் பூர்த்தி செய்த 94 விண்ணப்பதாரர்களுக்கு நியமனம் வழங்குவதற்காக கவனத்தில் கொள்ளப்பட்டிருக்கவில்லை. | 2020 சனவரி 03 ஆம் திகதி வரிசைக் கல்வி அமைச்சின் மூலம் விநியோகிக்கப்பட்ட ஊழியர் எண்ணிக்கையை தீர்மானித்தல் மற்றும் மீளாய்வு செய்தல் தொடர்பான கூட்டக் குறிப்பின் இலக்கம் 5 இன் தீர்மானத்தின் 3 ஆவது பிரிவின் பிரகாரமும் பிரதேச செயலகப் பிரிவு மட்டத்தில் ஆசிரியர்களை சேர்ப்பதற்கு இயலுமான வகையில் ஆசிரியர் சேவை பிரமாணக் குறிப்புக்களில் மாற்றங்கள் மேற்கொள்ள வேண்டியிருந்தமை முன்மொழியப்பட்டிருந்தது. | இலங்கை ஆசிரியர் சேவைப் பிரமாணக் குறிப்பின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| • மேற்கூறப்பட்ட சேவைப் பிரமாணக் குறிப்பின் 7.2.4.3 (அ) (ii) தெரிவு செய்யும் முறை போன்ற பிரிவுகளின் பிரகாரம் பெறுமானக் குறிப்பின் 7.2.4.1 இனதும் , 7.2.4.4.1 (2) இலும் குறிப்பிடப்பட்ட பிரகாரம் புள்ளியின் | 04 நியமனங்கள் அந்த பிரதேச செயலகப் பிரிவுகளில் விண்ணப்பித்த ஊனமுற்ற 04 விண்ணப்பதாரர்களுக்கும், ஒரு நியமனம் தேரர் அவர்களின் பெயரிலும் | இலங்கை ஆசிரியர் சேவை பிரமானக் குறிப்பின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | அடிப்படையில் பாடசாலைகளை அடிப்படையாகக் கொண்ட இடங்கள் அல்லாமல் வெற்றிட அறிவித்தல் குறிப்பிடப்பட்ட பிரகாரம் பிரதேச செயலகப் பிரிவு மட்டத்தில் நியமனங்கள் வழங்கி அந்த ஒரே பிரதேச செயலகப் பிரிவில் ஆகக் கூடிய புள்ளிகளைப் பெற்ற தகைமைகளைப் பூர்த்தி செய்த விண்ணப்பதாரர்கள் இருக்கும் போது கீழ் மட்டத்தில் புள்ளிகளைப் பெற்ற 07 விண்ணப்பதாரர்களுக்கு சில பாடங்களுக்காக நியமனம் வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்ததன் காரணமாக கூடுலான புள்ளிகளைப் பெற்று தகமைகளை பூர்த்தி செய்த 05 விண்ணப்பதாரர்களுக்கு நியமனம் இழக்கப்பட்டிருந்தது. | ஏனைய நியமனம் தகைமை இல்லாது இருந்ததன் அடிப்படையில் வழங்கப்பட்ட நியமனத்திற்குப் பதிலாக வழங்கப்பட்ட ஏனைய நியமனங்களாக இருந்ததுடன் எந்த ஒரு விண்ணப்பதாரருக்கும் அசாதாரண இடம்பெறவில்லை என்பதுடன் சரியான திட்ட முறைமையின் கீழ் நியமனங்கள் வழங்கப்பட்டுள்ளது. | |
| (v) | இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் தாபன விதிக் கோவையின் 1 ஆம் தொகுதியின் VIII அத்தியாயத்தின் 9.6 ஆம் பிரிவுக்கு முரணாக துறைசார்ந்த கடமைகளை நிறைவேற்றுவதற்காக தென் மாகாணக் கல்வி அமைச்சின் 04 உத்தியோகத்தர்களுக்கு பதிலீட்டு விடுமுறைகளை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்காமல் விடுமுறை தின சம்பளம் ஆக ரூபா 671,949 செலுத்தப்பட்டிருந்தது. | எதிர்காலத்தில் சம்பளம் செலுத்தும் கையளிக்கப்பட்ட விசேட கடமைகளின் விபரங்கள் அல்லது உரிய கோரல் கடிதங்கள் மற்றும் பங்கு பற்றியதை உறுதிப்படுத்தல்களைப் பெற்றும் மற்றும் அதன் பணிகளில் 08 மணித்தியாலங்கள் ஆகக் குறைந்ததை ஈடுபட்டிருந்த நாட்களில் சம்பளம் செலுத்துவதற்கு உத்தியோகத்தர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. | தாபன விதிக் கோவையின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**(இ) பெறுகைகள்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|
| 2006 இன் பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 6.2.2 ஆம் பிரிவின் பிரகாரம் தேசிய போட்டியாளர் கூறுவிலை கோரும் போது கேள்வி கோர வேண்டிய ஆகக் குறைந்த எல்லையாக 21 நாட்கள் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்காமல் தென் மாகாண ஆளுநர் செயலகத்தின் 02 செலவின விடயங்களில் இருந்து கிடைத்த நிதியேற்பாடுகளில் பாடசாலை மாணவர்களுக்காக பாடசாலைப் புத்தகப் பைகளை வழங்குவதற்காக மேற்கொள்ளப்பட்ட கூட்டுபெறுமதி ரூபா 14,480,000 ஆன 02 கொள்வனவுகளுக்கு உரியதாக பிரசுரிக்கப்பட்ட | அதன் பிரகாரம் பாடசாலை புத்தகப் பைகளுக்காக இரண்டு நிறுவனங்களினால் கூறுவிலைகள் சமர்ப்பிக்கப்பட்டதுடன் பாடசாலை உபகரணங்களுக்காக 06 கூறுவிலைகள் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. இந்த பெறுகை நடவடிக்கைகளுக்காக எடுக்கப்பட்ட காலம் 03 | பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 6.2.2 ஆம் பிரிவின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| பெறுகை அறிவித்தல் 02 இன் கேள்வி சமர்ப்பித்தல் ஆகக் குறைந்த காலமாக முறையே 03 நாட்களுக்கும் 05 நாட்களுக்கும் இடையிலான மிகவும் குறுகிய காலம் மாத்திரம் வழங்கப்பட்டமையால் போட்டியாளராகவும், வெளிப்படையாகவும் பெறுகை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | இற்கும் 05 இற்கும் இடையிலான நாட்களாக இருந்தமையால் ஒட்டுமொத்த பெறுகை செயற்பாடுகளும் பெறுகை நோக்கங்களின் பிரகாரம் மேற்கொள்ளப்பட்டிருந்தது. | |

**1.5.7.1 தென் மாகாண வீதி அபிவிருத்தி அதிகார சபை**

**(அ) தீர்க்கப்படாது இருந்த கணக்காய்வுப் பந்திகள்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|
| தென் மாகாண வீதி அதிகார சபையின் களகொட வேலைத் தளத்தில் பொருத்தப்பட்டிருந்த எஸ்போல்ட் இயந்திரம் ஏலத்தில் விற்பனை செய்யும் போது மதிப்பீட்டு பணிகளுக்காக நியமிக்கப்பட்ட குழுவின் மூலம் சொத்துக்காக வழங்கப்பட்ட மதிப்பீடு ரூபா 10,400,000 ஆக இருந்ததுடன் இயந்திரம் ஏலத்தில் விற்பனை செய்யும் போது ரூபா 21,100,000 தொகையில் விற்பனை செய்யப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் மதிப்பீட்டுப் பெறுமதி பிழையாதாக இருந்தமையும் மதிப்பீடு செய்யும் போது இயந்திரத்தில் உள்ள தார் லீற்றர் 21,782 மற்றும் டீசல் லீற்றர் 4028 தொடர்பாக கவனத்தில் கொள்ளாமல் மதிப்பீடு செய்யப்பட்டமையால் அதிகார சபைக்கு ரூபா 3,274,784 நட்டம் ஏற்பட்டிருந்தது. | இயந்திரத்தில் உள்ள தார் மற்றும் டீசல் தொடர்பாக கவனத்தில் கொள்ளாமல் இந்த இயந்திரம் தொடர்பாக அதிகார சபையின் உத்தியோகத்தர்கள் அதிக கவனம் இன்மையின் அடிப்படையில் செயற்பட்டிருந்தமை மற்றும் இது தொடர்பாக மேலும் பணிப்பாளர் சபையின் கலந்துரையாடலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளது. | பொறுப்பு வாய்ந்த தரப்பினரை இனங்கண்டு அந்த நட்டத்தை விரைவாக அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**1.5.8 தலைப்பு 310 – தென் மாகாண கல்வி திணைக்களம்**

**(அ) முகாமைத்துவ செயற்திறனின்மைகள்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|
| மாத்தறை வலயக் கல்வி அலுவலகத்திற்கு உரிய பாடசாலைகளில் க.பொ.த (சா.தரம்) மாணவர்களை இலக்காகக் கொண்டு 2024 ஆம் ஆண்டின் போது கணிதம் மற்றும் விஞ்ஞான பாடங்களுக்காக பாட அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம் நடாத்தப்பட்டு 47 பாடசாலைகளில் 1985 மாணவர்கள் கணித பாடங்களுக்காகவும், 31 பாடசாலைகளில் 1621 மாணவர்கள் விஞ்ஞான பாடங்களுக்காகவும் பங்குபற்றி பயிற்சிகள் மற்றும் முன் பயிற்சி பரீட்சை தயாரித்து பாட அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தை அமுல்படுத்தும் போது ஒவ்வொரு | மொத்த பாடப் பரிந்துரையை மேவுகை செய்யும் வகையில் தயாரிக்கப்பட்ட பயிற்சிப் பரிசோதனைகள் மூலம் மாணவர் கருத்தரங்குகள் அமுல்படுத்தப்பட்டிருந்தது. | மொத்த பாட அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டமும் அமுல்படுத்தல் வேண்டும். |

பாட அலகுகளிலும் மிகவும் சிறிய அளவு மாத்திரம் மேவுகை செய்யப்படுகின்ற வகையில் நடாத்தப்பட்டதுடன் பாட அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தை அமுல்படுத்துவது தொடர்பிலான நோக்கிலான மாணவர்களின் ஒட்டுமொத்த பாட அறிவை கட்டி எழுப்புகின்ற பங்களிப்பு குறைந்த மட்டத்தில் காணப்பட்டது.

**1.5.9 தலைப்பு 311 - தென் மாகாண கடற்தொழில், கால நடை உற்பத்தி மற்றும் அபிவிருத்தி சுற்றாடல் அலுவல்கள், கிராமிய கைத்தொழில் மின்வலு மற்றும் கிராமிய உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சு**

**1.5.9.1 கைத்தொழில் அபிவிருத்தி அதிகார சபை**

**(அ) கணக்கீட்டுக் குறைபாடுகள்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (i) | அதிகார சபைக்காக இணையதள பக்கம் ஒன்றை வடிவமைப்பதற்காக தனியார் நிறுவனம் ஒன்றுக்கு ரூபா 700,000 செலுத்தப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் அந்த நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்படாது இருக்கும் போது அந்த பெறுமதி மூலதனமாக்கப்படாது இருந்தது. | சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | சொத்துக்கள் சரியாக இனங்கண்டு கணக்கீடு செய்தல் வேண்டும். |
| (ii) | அமைச்சின் நிதியேற்பாடு மற்றும் அதிகார சபையின் நிதியத்தின் மூலம் ஜெனிப்பிட்டிய மற்றும் மிட்டியாகொட நிலையங்களுக்காக ரூபா 2,873,823 செலவினம் ஒன்றைச் செய்து சூரிய கலங்கள் பொருத்தப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் இணைப்பினை வழங்காது இருக்கும் போது அந்த பெறுமதி மூலதனமாக்கப்பட்டிருந்தது. | சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | சொத்துக்கள் சரியாக இனங்கண்டு கணக்கீடு செய்தல் வேண்டும். |

(ஆ) சட்டடங்கள் விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|---|
| (i) | இலங்கை சனநாய சோசலிசக் குடியரசின் தாபன விதிக் கோவையின் VIII ஆம் அத்தியாயம் | | | |
| (ஏ) | 3.1 , 3.2 மற்றும் 3.5 ஆம் பந்திகள் | தொடர்புடைய ஏற்பாடுகளுக்கு இணங்காத வகையில் கைத்தொழில் அபிவிருத்தி அதிகார சபையின் நிலையங்களில் மேற்பார்வை நடவடிக்கைகளை மேற்கொண்ட உத்தியோகத்தர்கள் தமக்கு கையளிக்கப்பட்டுள்ள சாதாரண கடமைகளை நிறைவேற்றுவதற்காக ரூபா 519,795 மேலதிக நேரப் படி செலுத்தப்பட்டிருந்தது. | அதிகார சபையின் பதவியணியினரை 03 வெற்றிடங்கள் காணப்பட்டதன் காரணமாக இந்த நிலைமை ஏற்பட்டிருந்ததுடன் இதற்காக ஆட்சேர்ப்புக்கள் மேற்கொள்வதன் ஊடாக இந்த நிலமை எதிர்காலத்தில் மாற்றியமைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | தாபன விதிக் கோவையின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (பீ) | 4.1 | தொடர்புடைய ஏற்பாடுகளுக்கு இணங்காத வகையில் கைத்தொழில் அபிவிருத்தி அதிகார சபையின் 06 உத்தியோகத்தர்களுக்கு நிறைவேற்றப்பட்ட மேற்பார்வைப் பணிகளுக்கு உரியதாக மீளாய்வாண்டின் போது ரூபா 545,789 மேலதிக நேரப் படி செலுத்தப்பட்டிருந்தது. | ஒரு உத்தியோகத்தருக்காக சில நிலையங்கள் மேற்பார்வைக்கு உட்படுத்தியதால் அபிவிருத்தி திட்டத்தின் கடமைகளை நிறைவேற்றுவதற்கு கடமைகள் கையளிக்கப்பட்டதன் ஊடாக செலுத்தப்பட்டிருந்தது. | தாபன விதிக் கோவையின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ii) | 2009 ஏப்ரல் 16 ஆந் திகதிய இலக்கம் 09/2009 , 2009 யூன் 17 ஆந் திகதிய இலக்கம் 09/2009 (I) மற்றும் 2023 மே 12 ஆந் திகதிய இலக்கம் | தொடர்புடைய சுற்றறிக்கையின் பிரகாரம் கைவிரல் அடையாள இயந்திரம் மூலம் வருகை மற்றும் வெளிச் செல்கை உறுதிப்படுத்தப்படாமல் கைத்தொழில் அபிவிருத்தி அதிகார சபையால் 05 உத்தியோகத்தர்களுக்காக ரூபா 1,149,250 மேலதிக நேரம் மற்றும் | பிரதான அலுவலகத்தில் விடுமுறை நாட்களில் கடமை நடவடிக்கைகளில் மேற்கொள்ளுவதாயின் அதில் உள்ள கைவிரல் அடையாள இயந்திரத்தில் குறிப்பிடுவதன் பிரகாரம் | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| 02/2021(VIII) அரச நிர்வாக சுற்றறிக்கை | விடுமுறை தினப் படிகள் செலுத்தப்பட்டிருந்தது. | மேலதிக நேரம் செலுத்தப்பட்டுள்ளது. |

**(இ) விளைவற்ற மற்றும் குறைவாகப் பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (i) | ரிதியகம நன்னீர் மீன் உற்பத்தி நிலையத்தில் இரண்டாவது கட்டத்தில் நிர்மாணிக்கப்பட்ட 11 தாங்கிகளில் 10 தாங்கிகள் பயன்படுத்தப்படாமல் விளைவற்றுக் காணப்பட்டதுடன் அதில் 04 தாங்கிகள் 2022 ஆம் ஆண்டின் போது ரூபா 1,114,459 கிரயத்தில் நிர்மாணிக்கப்பட்டிருந்தது. மேலும் ரிதியகம நன்னீர் மீன் இனப் பெருக்க நிலையத்திற்காக 10 ஏக்கர் காணி ஒன்று 2023 ஆம் ஆண்டின் யூன் மாதம் 07 ஆந் திகதி கடற்தொழில் மற்றும் கால் நடை உற்பத்தி அமைச்சினால் கைத்தொழில் அபிவிருத்தி அதிகார சபைக்கு கையளிக்கப்பட்ட போதும் 1½ வருடத்திற்கு அண்மித்த காலம் இந்த காணி எந்த ஒரு பணிகளுக்காகவும் பயன்படுத்தப்படாது இருந்ததுடன் 2023 ஆம் ஆண்டில் 84 தென்னங்கன்றுகள் நடப்பட்டிருந்த போதிலும் உரிய பராமரிப்பு இல்லாமையினால் இது வரையில் அந்த தென்னங்கன்றுகள் முழமையாக அழிவுக்கு உட்பட்டு இருந்தது. | ரிதியகம நிலையத்திற்காக கிடைக்கப் பெற்ற புதிய 08 ஏக்கர் நிலத்தை ஆக்க பூர்வமான வகையில் பயன் படுத்துவதற்கு தேவையான செயற்திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது. | சொத்துக்களை உச்ச அளவில் வினைத்திறனான வகையில் பயன்படுத்துதல் வேண்டும். |
| (ii) | ருவினிகம பலநோக்கு நிலையத்தில் காணப்படுகின்ற இட வசதிகளின் அளவில் மிகவும் வரையறுக்கப்பட்ட இட அளவு ஒன்று மாத்திரம் அதிகார சபையால் உற்பத்தி நடவடிக்கைகளுக்காக பயன்படுத்தப்பட்டதுடன் கட்டிடத்தில் கணிசமான அளவு விளைவற்றுக் காணப்பட்டது. மேலும் அந்த நிலத்தை ஆக்கபூர்வமான நடவடிக்கைகளில் ஈடுபடுத்தாமல் காடு வளர்ந்து காணப்பட்டதுடன் கட்டிடம் யாவும் அழிவடைந்து செல்லும் நிலையில் காணப்பட்டது. | கட்டிடத்தின் அறைகளில் பல்வேறு பணிகளுக்காக ஈடுபடுத்துவதற்கும் நிலத்தில் 22 தென்னங்கன்றுகளை நட்டு வைக்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | சொத்துக்களை உச்ச அளவில் ஆக்கபூர்வமான வகையில் பயன்படுத்துதல் வேண்டும். |

## 1.5.10 தலைப்பு 313 – தென் மாகாண கைத்தொழில் அபிவிருத்தித் திணைக்களம்

### (அ) போதியளவான அதிகாரப் பலத்தினால் உறுதிப்படுத்தப்படாத கொடுக்கல் வாங்கல்கள் வரையறைகளை பின்பற்றாமை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|
| ஆடை மற்றும் சிறு கைத்தொழில் முற்பணக் கணக்கிற்கு உரிய அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்த செலவினத்தில் மற்றும் வரவு மீதியில் ஆகக் கூடிய எல்லை ரூபா 300,000,000 மற்றும் ரூபா 244,848,741 உம், உள்ளபடியான செலவினம் மற்றும் வரவு மீதி முறையே ரூபா 421,631,382 மற்றும் ரூபா 300,300,039 உம் ஆனமையால் எல்லையில் முறையே ரூபா 121,631,382 இனாலும், ரூபா 55,451,298 இனாலும் விஞ்சியிருந்தது. | 2024 இன் நிதிக் கூற்றில் 11 ஆவது பகுதியில் காண்பிக்கப்படுகின்ற விடய இலக்கம் 31302 என்ற தென் மாகாண கைத்தொழில் அபிவிருத்தித் திணைக்களம் வணிக முற்பணக் கணக்கில் எல்லையை விஞ்சியிருந்தது. | அங்கீகரிக்கப்பட்ட எல்லையில் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### (ஆ) முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (i) | அகங்கம, அலுத்வெல லுஹுு பொறியியலாளர், அம்பலாங்கொட மர தொழில் நுட்ப நிறுவனம் மற்றும் அலுமினிய கைத்தொழில் சாலை போன்ற நிறுவனங்களை பயிற்றுவிப்பதற்காக மாணவர்கள் பதிவு செய்தல் ஆகக் குறைந்த மட்டத்தில் காணப்பட்டதுடன் பாடசாலை மட்டத்தில் உள்ள பாடநெறிகள் மற்றும் அவற்றிக் முக்கியத்துவம் தொடர்பாக பாடசாலை விட்டுச் செல்கின்ற மாணவர்களுக்கு அறிவித்தல் போன்ற திட்டம் ஊடாக பாட நெறியாளர்களுக்காக மாணவர்களை தொடர்புபடுத்துதல் தொடர்பில் கைத்தொழில் அபிவிருத்தி திணைக்களம் கவனம் செலுத்தியிருக்க வில்லை. | சாதாரண தரம் சித்தியடைந்த அல்லது சித்தியடையாத எந்த ஒரு மாணவரும் உயர் தரமான தொழிற்பாட நெறிகளில் ஈடுபடுவதன் கீழ் உயர் கல்வி பெற்றுக் கொள்வதற்கான சந்தர்ப்பம் வழங்குவதன் ஊடாக பாடசாலை மாணவர்களை கவந்து கொள்வதற்கு முடியுமாக இருந்தமமையார் எதிர்வரும் ஆண்டில் இந்த பிரச்சனைகளை குறைத்துக் கொள்வதற்கு முடியுமென எதிர்பார்க்கப்பட்டுள்ளது. | மாணவர்களுக்கு அறிவித்து பாட நூலுக்காக மாணவர்களை தொடர்புபடுத்துவது தொடர்பில் போதியளவான வேலைத் திட்டம் ஒன்று அமுல்படுத்தப்படல் வேண்டும். |
| (ii) | தேசிய தேவை ஒன்றாக நடாத்திச் செல்லப்படுகின்ற தேசிய கை இயந்திரம், ஆடைக் கைத்தொழில் புடவை போட்டிகளுக்காக உற்பத்தி செய்யப்பட்ட பெறுமதி ரூபா 11,688,343 ஆன கண்காட்சி விடயங்களை விற்பனை தொடர்பாக முறையான வேலைத் திட்டம் ஒன்று கைத்தொழில் அபிவிருத்தி திணைக்களத்தால் அமுல் படுத்தப்பட்டிருக்கவில்லை. றுகுணு | எதிர் காலத்தில் சந்தையின் கேள்வி குறைகின்ற நிலைமையினைக் கவனத்தில் கொண்டு மேற்கொள்வதற்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. | இந்த கண்காட்சிப் பொருட்களை விற்பனை செய்வதற்கு முறையான வேலைத் திட்டம் ஒன்று தயாரித்தல் வேண்டும். |

ரன்செலு நிமவு ஆலைகளில் நிலையப் பொறுப்பு உத்தியோகத்தராக சேவையாற்றுகின்ற ஆடை ஆலோசகரால் இந்த கைத்தொழில் கணக்காட்சிக்காக நீண்டகால ஊழியம் பயன்படுத்தப்பட்டதுடன் தொழில் நுட்பவியலாளர் உதவியைப் பெற்று கண்காட்சிகளை நிர்மாணிக்கும் நடவடிக்கைகளை மேற்கொண்டமையினால் பொருளாதார ரீதியாக பூர்த்தி செய்யப்பட்ட உற்பத்திகளுக்காக தொடர்புபடுத்தக்கூடிய கணிசமான காலம் இந்த பணிகளுக்காக எடுத்தமையும் அவதானிக்கப்பட்டது.

**(இ) விளைவற்ற மற்றும் குறைவாகப் பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|
| கைத்தொழில் அபிவிருத்தித் திணைக்களத்திற்கு உரிய மாத்தறை – கொழும்பு பிரதான வீதிக்கு முன்னாள் உள்ள ஹபராதிரையில் அமைந்துள்ள இரண்டு மாடிக் கட்டிடத்தில் கீழ் மேல் மாடி மற்றும் பெறுமதி ரூபா 297,571 ஆன அம்பலாங்கொட மரத் தொழில்நுட்ப நிறுவனத்தின் 03 இயந்திரங்களும் எந்த ஒரு பணிகளுக்கும் ஈடுபடுத்தப்படாமல் விளைவற்றுக் காணப்பட்டது. | மேல் மாடியில் விற்பனைக் கடை ஒன்றில் உள்ள ஒர பகுதியை வாடகைக்கு வழங்குவதற்கோ அல்லது ஏனைய பணிகளுக்காக ஈடுபடுத்துவதற்கும் இயந்திரத்தை பழுது பார்க்கும் நடைவடிக்கைளை மேற்கொண்டு மாணவர்களிக் பயிற்சி தேவைகளுக்கா ஈடுபடுத்துவதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும். | சொத்துக்களை உச்ச அளவில் பயன்பாட்டைப் பெற்றுக் கொள்ளும் வகையில் பயன்படுத்துதல் வேண்டும். |

**1.5.11 தலைப்பு 314 – தென் மாகாண விவசாய, கமநல அபிவிருத்தி, நீர்ப்பாசன , நீர் வழங்கல் மற்றுமை நீர் வடிகாலமைப்பு, வர்த்தகம், உணவு வழங்கல் மற்றும் விநியோகித்தல் மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சு**

**(அ) முகாமைத்துவ செயற்திறனின்மைகள்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|
| தென் மாகாண விவசாய அமைச்சினால் காலி மாவட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட 04 பிரதேச செயலாளர் பிரிவுகளில் தெரிவு செய்யப்பட்ட 1570 நலனாளிகளுக்காக ரூபா 7.5 மில்லியன் செலவில் மிளகாய் கன்றுகள் பயிரிடல் மற்றும் உரம் வழங்கி ரூபா 141.3 மில்லியன் அறுவடை வருமானம் மதிப்பீடு | எதிர் காலத்தில் இவ்வாறான செயற்திட்டங்களை திட்டமிடும் போது, அமுல்படுத்தும் போது குறைபாடுகளை குறைக்கும் வகையில் நடவடிக்கை எடுப்பதற்கு கவனத்தில் கொள்ளப்படும். | செயற்திட்டத்தில் இருந்து எதிர்பார்க்கப்பட்ட நோக்கங்களை நிறைவேற்றுவதற்கு முடியுமான வகையில் செயற்திட்டங்கள் |

| | | |
|---|---|---|
| செய்யப்பட்டிருந்த போதிலும் 2024 மே 31 ஆந் திகதி வரையிலும் ரூபா 11 மில்லியன் மாத்திரம் வருமானம் பெறப்பட்டிருந்ததுடன் இந்த செயற்திட்டம் 05 மாதங்களான குறுகிய காலத்தில் கைவிடப்பட்ட செயற்திட்டதிற்கும் உட்பட்டிருந்தது. | | திட்டமிட்டு அமுல்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**1.5.12 தலைப்பு 315 – தென் மாகாண விவசாயத் திணைக்களம்**

**(அ) முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|
| விவசாய தொழில் முயற்சியாளர்களை அபிவிருத்தி செய்வதற்கான பேரளவிலான நிதியத்தின் மூலம் விவசாய தொழில் முயற்சியாளர்களுக்கு அபிவிருத்திக்காக 50 சதவீத உதவியின் கீழ் கூட்டுப் பசளை அரைக்கும் இயந்திரம் மற்றும் கூறுகளாக்கும் இயந்திரம் கொள்வனவு செய்வதற்காக ரூபா 1,000,000 ஒரு நலனாளிக்கு மாத்திரம் வழங்கப்பட்டிருந்த இந்த கொள்வனவுகளுக்காக நிதியத்தை வழங்கியிருக்கும் போது பெறுகை சுற்றறிக்கை பின்பற்றுதலைப் போன்று நிறுவனத்தில் எந்த ஒரு பங்களிப்பும் மற்றும் வெளிப்படையும் இன்றி உரிய தொழில் முயற்சியாளர்களின் விருப்பத்தின் பிரகாரம் கொள்வனவு மேற்கொள்ளப்பட்டிருந்தது. மேலும் நலனாளிகள் முறையான வகையில் நிபந்தனைகளை உள்ளடக்கிய உடன்படிக்கையில் கைச்சாத்திடப்படாது இருந்ததுடன் இந்த இயந்திரம் எந்த ஒரு உற்பத்தி நடவடிக்கைகளுக்கும் ஈடுபடுத்தப்படாதமையினால் விளைவற்றுக் காணப்பட்டது. | இது தொடர்பாக தென் மாகாண சபையின் சட்ட உத்தியோகத்தரை சந்தித்து ஆலோசனை பெறப்பட்டுள்ளதுடன் அந்த ஆலோசனையின் பிரகாரம் இந்த நலனாளி, உபகரணங்களை பெற்றுக் கொள்வதற்கு கருத்து தெரிவித்து புதிய நலனாளி மற்றும் திணைக்கள உத்தியோகத்தர்களுக்கு இடையே கலந்துரையாடல் ஒன்று நடாத்தி எதிர் காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும். | செயற்திட்டத்தை மேற்கொள்ளும் போது மிகவும் வெளிப்படையாக மேற்கொள்வதற்கும், சட்ட உத்தியோகத்தரிடம் இருந்து பெறப்பட்டிருந்த ஆலோசனையின் பிரகாரம் விரைவாக நடவடிக்கையும் எடுத்தல் வேண்டும். |

**(ஆ) விளைவற்ற மற்றும் குறைவாகப் பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|
| கன்னொருவை பூங்கா பயிர் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிறுவனம் (HORDI) இனால் 2018 ஆம் ஆண்டில் ரூபா 731,880 தொகையில் கொள்வனவு செய்யப்பட்ட தென் மாகாண விவசாயத் திணைக்களத்தின் மாத்தறை மண் ஆய்வு கூடத்திற்கு வழங்கப்பட்டிருந்த நிற ஒளிமாலை (Spectrophotometer) செயலிழந்தமையினால் பழுது பார்க்கும் | மேற்கூறப்பட்ட நிறுவனம் சமர்ப்பித்துள்ள கூறுவிலைகள் சந்தையில் காணப்படுகின்ற தற்போதய விலையுடன் ஒப்பீடு செய்து காண்பிக்கப்பட்டதுடன் அதன் படி அந்த பரிந்துரையின் பிரகாரம் அந்த இயந்திரத்தை பழுது | பழுது பார்த்தல் நடவடிக்கைகளை மேற்கொள்ளும் போது தொழில் நுட்ப மற்றும் கைத்தொழில் சார் அறிக்கை பெறப்படல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| மதிப்பீடு ரூபா 2,269,930 ஆக இருந்ததுடன் அந்த இயந்திரத்தின் கிரயத்தைப் போன்று மூன்று மடங்கினை விட அதிகமான தொகையாகும். பெறுகைக் குழுவினால் பழுது பார்த்தல் மேற்கொள்ள தீர்மானிக்கப்பட்ட போதிலும் சமர்ப்பிக்கப்பட்ட பழுது பார்த்தல் மதிப்பீடு தொடர்பாக உரிய தொழில் நுட்ப அறிக்கை அல்லது தொழில் நுட்ப மதிப்பீட்டுக் குழு அறிக்கை தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | பார்ப்பதற்காக பெறுகைக் குழுவினால் தீர்மானிக்கப்பட்டமையால் உரிய பழுது பார்த்தல்கள் மேற்கொண்டு பட்டியல் விவசாயத் திணைக்களம், நன்நெறுவைக்கு அனுப்பப்பட்டுள்ளதுடன் தற்போது இந்த இயந்திரம் உரிய செயற்படு நிலையில் ஆராய்ச்சி நடவடிக்கைகளுக்கு பங்களிப்பை வழங்குகின்றது. | |

## 1.5.13 தலைப்பு 316 – தென் மாகாண நீர்பாசனத் திணைக்களம்

### (அ) முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (i) | தென் மாகாண நீர்பாசனத் திணைக்களத்திற்கு தேவையான நீர் சமச்சீர் கூற்று வரைபடத்தை நிர்மாணிப்பதற்கு முடியுமான ரோன் கமரா பயன்படுத்தி மிக நெருக்கமான வரைபடத்தை பெற்றுக் கொள்ளும் செயற்திட்டத்திற்காக 2022 திசெம்பர் 20 ஆம் திகதி தோல்வி பெறப்பட்டு 2022 திசெம்பர் 28 ஆந் திகதி உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டு 2022 திசெம்பர் 31 ஆந் திகதி ரூபா 7,886,825 தொகை செலுத்தப்பட்டதுடன் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் பெறுகைகள் வழிகாட்டிக் கோவைகளுக்கு புறம்பாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. மேலும் நீர்ப் பாசன முகாமைத்துவத்திற்கு உரிய திட்டங்களை தயாரிக்கும் போதும், நீர்ப் பாசன திணைக்களத்தின் விருப்பத்திற்கு செயற்திட்டம் மூலம் பெறப்பட்ட மிக அண்மையான வரைபடங்கள் உள்ளடக்கிய பெறுபேறுகள் விளைவுகள் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. | உரிய ரோன் தொழில்நுட்ப விளைவுகள் பெறுபேறுகள் சரியாக அமைக்கப்படடு எதிர் காலத்தில் திணைக்களத்தின் விருப்பத்தை நோக்காக கொண்டு பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | பெறுபேறுகளை ஆக்கபூர்வமாக திணைக்களத்திற்கு வழங்கக் கூடிய வகையில் தேவையான நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ii) | தென் மாகாண நீர்ப்பான திணைக்களத்தின் இணைதள முகாமைத்து தகவல் முறைமை (MIS) மற்றும் உலகலாவிய தகவல் முறைமை (GIS) அபிவிருத்தி செய்வதற்காக மீளாய்வாண்டின் இறுதி வரையில் ரூபா 28,707,068 செலவினம் செய்யப்பட்டிருந்த போதிலும் உரிய முறைமைகளில் | நிறுவனங்களிடம் இருந்து கலந்துரையாடி தேவையான பிரகாரம் கூறுவிலைகள் பெற்றும் மீண்டும் செயற்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | இணையதளத்தை நாளது வரையாக்குவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| நுழைவதற்கு முடியாதிருந்த தகவல் முறைமை விளைவற்றுக் காணப்பட்டது. | | |
| (iii) தென் மாகாண நீர்ப் பாசனத் திணைக்களத்தால் பூகோள தகவல் முறைமைக்கு உரிய ஒரு மாணவருக்கு ஒரு வரைபடத்தை அமைப்பதற்கு 02 நாட்கள் செலவாகும் என்ற அடிப்படையில் நீர்பாசன தலைமையின் கீழ் நியமிக்கப்பட்ட குழு மூலம் 15 பயிற்சி மாணவர்களுக்கு 2017 மார்ச், ஏப்ரல் மற்றும் யூலை மாதங்களின் போது ஒரு வரைபடத்திற்கு ரூபா 2,000 வீதமும் யூன் மற்றும் யூலை மாதங்களில் ஒரு மாதத்திற்கு ரூபா 700 வீதமும் ரூபா 6,646,238 தொகை மற்றும் மாணவருக்காக ரூபா 357,720 சேமலாப நிதியத்திற்கும் செலுத்தப்பட்டிருந்தமையும் அதன் பிரகாரம் 4,000 வரைபடத்திற்கு அண்ணளவான அளவு பூர்த்தி செய்ய வேண்டி இருந்தது. எனினும் 2017 மே மற்றும் யூன் மாதங்களில் போது 15 மாணவர்களுக்கு 1138 வரைபடங்கள் மாத்திரம் வரைபடமாக்கப்பட்டிருந்தமை வெளியிடப்பட்டிருந்த போதிலும் 15 மாணவர்களுக்கு 60 நாட்கள் தொடர்ச்சியாக வேலையின் அடிப்படையில் வரைபடமாக்கக் கூடியதாக 15 நாட்களுக்கு 450 வரைபடங்கள் மாத்திரமே முடியுமாக இருந்தமையால் 1138 வரைபடங்களை வரைபடமாக்கப்பட்டதாக காண்பிக்கப்பட்டமை கணக்காய்வில் பிரச்சனைக்கு உரியதாக இருந்தது. | மே மற்றும் யூன் மாதங்களில் 15 மாணவர்களுக்கு ரூபா 700 வீதம் 1138 வரைபடங்களுக்காக வரைபடமாக்குவதற்காக அல்லாமல் வரை படத்தின் பிரகாரம் தகவல்கள் சேகரிப்பதற்காகவே செலுத்தப்பட்டிருந்தது. | வரைபடங்கள் எண்ணிக்கையை அடிப்படையாகக் கொண்டு உரிய கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டமை அவதானிக்கப்பட்டமைய ால் முறையான பரிசோதனை ஒன்று மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 1.5.14 தலைப்பு 317 – தென் மாகாண கூட்டுறவு அபிவிருத்தி திணைக்களம்

**(அ) செயற்பாட்டு செயற்திறனின்மைகள்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|
| (i) அம்பாந்தோட்டை மாவட்டத்தில் கூட்டுறவுச் சங்கங்களில் கணக்காய்வு முடியவடைந்திருந்த கணக்குகளுக்காக 2024 ஒக்தோபர் 31 ஆந் திகதி வரையில் ரூபா 301 மில்லியன் தொகை கூட்டுறவு அபிவிருத்தி நிதியத்திற்கு அறவிடப்படாது இருந்ததுடன் அதற்குரிய காலப் பகுப்பாய்வும் தற்போது செயலிழந்த செயற்பாடற்ற சங்கங்களில் இருந்து | தற்போது அந்த தொகுதி செலுத்துவதற்கு சில சங்கங்களுக்கு நிதி இயலுமை காணப்படாது இருந்தது மற்றும் அறவிட வேண்டிய கணக்கை செலுத்தாமல் புறக்கணிக்கின்ற சங்கங்கள் தொடர்பாக எடுக்க வேண்டிய சட்ட ரீதியான நடவடிக்கைகள் | நிதியத்திற்கு அறவிட வேண்டிய பணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| கிடைக்க வேண்டிய தொகை தொடர்பாக அறிக்கையும் சமர்ப்பிக்கப்படவில்லை. | எடுக்கப்படவில்லை. | |
